ஸ்ரீ குமரகுருபரர்



ஸ்ரீ குமரகுருபரர் 300 ஆம் ஆண்டு நிறைவு
88 மே முதல் 89 மே முடிய

தொகுதி - 10 பகுதி - 5

நமரங்காள்!

இன்று கொளற்பால நாளைக் கொளப் பொருள்
நின்று குறையிரப்ப நேர்படான் — சென்றொருவன்
ஆவன கூறின் எயிறலைப்பான் ஆறலைக்கும்
வேடு அலன் வேந்தும் அலன்.

— ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

இன்று கொள்ளவேண்டிய வரிப் பொருளை ஒரு நாள் கழித்து நாளைக்கு வாங்கிக்கொள்ளுதற்குப் பொறுக்க மாட்டான். அவன் முன்னே நின்று மக்கள் குறை சொல்லிக் கொள்ளுதற்குக் காட்சிதர உடன்படான். அவன் முன் சென்று அமைச்சன் ஒருவன் உறுதி ஆவனவற்றைக் கூறினால் அதனை ஏற்காமல் பல்லைக்கடிப்பான். அப்படிப்பட்ட அரசன், வழிப்போக்கரிடம் கொள்ளையடிக்கும் வேடனும் அல்லன்; நாட்டைக் காக்கும் அரசனும் அல்லன்.

ஸ்ரீ குமரகுருபரர்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலைமாமுனிவர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான்சுவாமிகள் அவர்கள்
அருளாணையின் வண்ணம் வெளிவரும் சமய இலக்கியத் திங்களிதழ்

சிறப்பாசிரியர்கள்
திரு அ. ச. ஞானசம்பந்தன்
திரு. தா. ம. வெள்ளைவாரணம்
ஆசிரியர் குழு :
திரு. மு. அருணைசலம்
செந்தமிழ்க் கலாநிதி
திரு. கா. ம. வேங்கடராமையா
முதுமுனைவர்
ச. தண்டபாணி தேசிகர்
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்
திரு. க. வச்சிரவேல்முதலியார்
புலவர் திரு. கீரன்
டாக்டர் டி. பி. சித்தலிங்கையா
டாக்டர் கு. சுந்தரமூர்த்தி
பனசை. திரு. சுவாமிநாதன்

உள்ளே :

1 பெருமான் புகழ்
2 ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300ஆவது ஆண்டு நிறைவு
3 ஸ்ரீ குமரகுருபரர் நெறி விளக்கம்
4 குமரகுருபர அடிகள் வரலாற்றாராய்ச்சி
5 குமரகுருபரர் கண்ட உழவு
6 கேதாரத் திருப்பணி
7 குமரகுருபரர் கண்ட காசிமாநகரம்
8 ஒரு பாடல்
9 மதுரைக் கலம்பகம்
10 ஆலயபூஜைப் படிக்காசுநிதி
11 நூல் நிறை
12 ஞானமிர்தம்

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்.

பெருமான் புகழ்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

"கயிலைமாமுனிவர்"

ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் புராணக்கருத்துக்களையும், சாத்திர உண்மைகளையும் சொல்லும் முறைமை சுவையுடையதாகும். பிறர் யாரும் சிந்திக்காத வகையில் வின்னியாசமாகவும், சமத்காரமாகவும்' அற்புதாலங்காரம் பொருந்தவும் ஸ்ரீ சுவாமிகள் அவற்றைத் தெரிவிப்பார்கள்.

சிவபரம்பொருள் ஐந்தொழிலையும் செய்கிறது. அரனை இருந்து அழித்தல் தொழில் செய்கிறது என்பது நமது சாத்திரங்கள் அறிவிக்கும் செய்தியாகும்.

திருமால் கிருஷ்ணவதாரத்தில், ஏழு உலகங்களையும் உண்டான் என்பது புராணக் கருத்து.

> "பாலன் தனதுருவா ஏழுலகுண்டு ஆலிலையின்
> மேலன்று கண்துயின்றான் மெய்"

இப்பௌராணிகத்திற்கும் மேலே கூறப்பெற்ற சாத்திர உண்மைக்கும் யாதொரு தொடர்புமில்லை. எனினும்.

ஸ்ரீ சுவாமிகள் இரண்டையுந் இணைத்து ஓர் அற்புதமான கருத்தை உருவாக்குவது நம்மை வியப்புக் கடலுள் ஆழ்த்துகிறது.

சிவபெருமானின், விடை (ரிஷபம்) திருமாலாவர் பீடுடை மால்விடையான் எனச் சிவன் துதிக்கப்பெறுபவன் சிவனின் தொழில் அழித்தல் தொழில் என்று சொல்லுவது அதிகப்படியானது. சிவனின் விடையே ஏழுலகங்களையும் தின்றழிக்கும் ஆற்றலுடையது. எனவே சிவன் அழித்தலை ஒரு தொழிலாகச் செய்யவேண்டிய சிரமமில்லை என்கிறார் ஸ்ரீ சுவாமிகள்

'உம்பர் கோன்விடை ஒன்றுஉல கேழு முண்டதுவே'

என்ற ஓரடிக்குள் இந்த விந்தையைச் செய்கிறார்கள். உம்பர்கோன் என்ற சொல் பொதுவாக இந்திரனையே குறிப்பது. ஈண்டுச் சிவனைக் குறிப்பது மயக்கம் தரும். எனவே உம்பர்கோன் என்பது சிவனையே என நாமுணரும் பொருட்டுக்.

கம்பை மாநதி யின்க ரைச்சிறு
கன்னி பார முலைத்த மும்பணி
உம்பர் கோன்

என்றருளுகிறார்கள். காஞ்சிபுரத்து மான்மியங்களுள் இதுவுமொன்றாகும். காமக்கண்ணியார் (காமாட்சி) கம்பையாற்று மணலில் இலிங்கம் தாபித்து வழிபாடாற்றிக் கொண்டிருந்தார்கள். அம்மையாரின் பக்திமேலீட்டைக் கண்டுதுய்த்தற்காக இறைவன் கம்பை நதியில் வெள்ளம் பெருக்கச் செய்தார். அது கண்டு மருண்ட அம்மையார் சிவலிங்கம் கரைதலாகாது எனத் திருவுளம் கொண்டு அதனை அழுந்தத் தழுவிக் கொண்டார். அவ்வழுத்தத்தால் இலிங்கத்தின் முன்பக்கம் கொங்கைக் குறிகளும் பின்பக்கம் வளைக்குறிகளும் பதிந்தன, இச்செய்தியை:

துடிகொள் நேரிடையாள் சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய் சுவடு
பொடிகொள்வான் தழலில் புள்ளிபோல் இரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே

என்று திருவாசகம் தெரிவிக்கிறது.

முலைக்குறியும் வளைக்குறியும் கொண்டதற்பின் முதலவனே
இலைக்குறியும் குணமுமெனல் எவ்வண்ணம் இயைந்திடுமே

எனவும்,

'களபமணி அம்பிகைக் கனகதன மின்புறத்
தழுவிவரு மங்கலச் சுவடால் விளங்கின'

எனவும் கச்சிக்கலம்பகம் கூறும் காஞ்சிப் புராணத்துள் இவ் வரலாறு விரிவாக உள்ளது.

உம்பர்கோன் சிவனே என நாமுணர இது கூறப் பெற்றது. உம்பர்கோன் சிவனே என நாமுணரக் கூறுதற்குச், சிவனின் வேறு பல திருவிளையாடல்கள் இருக்கவும் இது கூறியது இந்திரனைப் பொதுவாகக் குறிக்கும் சொல் கூறிய போதே சிருங்காரம் கூறியதாகிய நகையாகும்.

இனிப் பாடலின் முழுவடிவையும் காண்போம்.

கம்பை மாநதி யின்க ரைச்சிறு
கன்னி பார முலைத்த மும்பணி
உம்பர் கோன்விடை ஒன்றுல
கேழு முண்டதுவே

இத்தறள்வெண்டாழிசையின் உள்ளக் கிடக்கையை நன்கு சிந்தித்தால் காஞ்சிபுரத்திற்குச் சென்று வழிபட ஸ்ரீ சுவாமிகள் வேட்கை கொண்டிருந்தது புலனாகும். அவ்வகையில் ஸ்ரீ சுவாமிகள் காசிக்குச் செல்லுங்கால் காஞ்சிக்கும் சென்றூர்கள் என்ற வரலாறு பொருந்துவதே. எனினும்

சீர்வாழி கச்சிநகர்த் திருமலைபூ பதிவாழி
பேர்வாழி அவன் செல்வம் பெரிதூழி வாழியவே

என ஸ்ரீ சுவாமிகள் பாடியிருப்பார்களா என அறிஞர்கள் ஆராய வேண்டும்.

கம்பை மாநதி எனத்தொடங்கும் இப்பாடலின் கீழே பின்வரும், செய்யுளிலக்கணக் குறிப்புக் காணப்பெறுகிறது;

"இஃது அடியிரண்டாய்ச் சீர்வரையறையின்றி ஈற்றடி குறைந்து வந்தமையால் குறள் வெண்டாழிசை"

"அந்தங்குறைநவும்......குறளினத்தாழிசையே"

என்ற இலக்கணத்தால் இது குறள் வெண்தாழிசையாகிறது. சீர்வரையறை இன்றி என்பதற்கு இனைத்துச் சீர்களான் வரப்பெறும் என்ற வரையறையின்றி என்பதே பொருளாகும். மா, விளம், காய், கனி, பூ, நிழல் என்னும் சீர்களில் வரை யறையின்றி எனப் பொருள் கோடல் பொருந்தாது.

இப்பாடலை முன்னடி நான்கு சீர்களாகவும், பின்னடி மூன்று சீர்களாகவும் கொள்வது சீரிதன்று. அவ்வாறு கொள்ளின் கனிச்சீரிரண்டும் நிழற்சீரொன்றும், பூஞ்சீரொன்றும் இப்பாடலில் உளதாகும். அது "இனப் பாடல்களுக்கு ஓசை ஒப்புமை உண்டு" என்னும் கோட்பாட்டுடன் மாறுபடும் எனவே முதலடி எட்டுச் சீர்களாலும் பின்னடி ஐந்து சீர்களாலும் அமைந்துள்ளவாறு பகுத்தலே நன்று இதனல் செப்பலோசை மிக்கதோர் சந்தம் பொதிந்ததாக இப்பாடல் அமைந்திருத்தலை உணரலாம்.

சிவ சிவ

ஸ்ரீ குமரகுருபரர்

300 - ஆவது ஆண்டு நிறைவு

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆம் ஆண்டு நிறைவு விழாக்கள் பல்வேறு ஊர்களில் விரிவாகக் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. தமிழக அரசின் சார்பில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆம் ஆண்டு நிறைவுவிழா, சிதம்பரனூர் மாவட்டத்தில் கொண்டாட அதிகாரிகள் அளவிலான திட்டமிடல் நடைபெறுவதாக வந்துள்ள செய்தி மிக்கமகிழ்ச்சியைத் தருகிறது.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய பிரபந்தங்களைப் பல்வேறு கோணங்களில் முற்றிலுமாக ஆராய்ந்து இவ்விழாவை நிலையான பயனுள்ளதாக அமைத்தற்பொருட்டு, பன்னிரண்டு பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள், தமிழ்த்துறை நிகழ்ச்சியாக ஸ்ரீ குமரகுருபரர் பிரபந்தங்கள் பற்றிய கருத்தரங்குகள் நிகழ்த்துமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார்கள்.

பாண்டிச் சேரியில் இருக்கும் மத்திய பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் மாண்புயர் டாக்டர் வெங்கட சுப்பிரமணியம் அவர்கள் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்பால் தமக்குள்ள ஈடுபாட்டையும், அவர்தம் பிரபந்தங்கள் தம்மை ஈர்த்தமை பற்றியும், பாண்டியில் ஸ்ரீ குமரகுருபரர் 300 - ஆம் ஆண்டு நிறைவுவிழா விரிவாகச் செய்ய விருத்தல் பற்றியும் எழுதியுள்ளார்கள். இத்தகு பெரியவர்களின் ஆர்வம் யாவருக்கும் உற்சாகமூட்டும் என்பதில் ஐயமில்லை.

செயற்குழு உறுப்பினர்களின் முழுப்பட்டியல் இவ்விதழில் வெளியிடுவதாக இருந்தது. மேலும் சிலரைச் சேர்க்க வேண்டியிருப்பதால் அடுத்த இதழில் நிறைவான பட்டியல் வெளியிடப் பெறும்.

நி. ஆ— ர்.

Siva Siva

Thevara Goshti - Mahasivaratri Festival

KALAHASTI

Conducted according to the orders of His Holiness Sila Sri KASIVASI MUTHUKUMARASWAMI THAMBIRAN SWAMIGAL AVERGAL

Head of Sri Kasi Mutt, Tirupanandal [Thanjavur Dt.]

From 15—2—88 to 20—2—88

The Siva Shrine at Kalahasti is one of the shrines sanctified by the Hymns improvised by the three Great Saiva Saints Thiru Gnanasambandar, Thiunavukkarasar and Sundarar. A spider, a cobra and an elephant attained salvation by worshipping the Lord and hence the Kshetra got the name Sri Kalahasti. It is one of the Pancha Bhoota Kshetras - Vayulinga where Kannappa Nayanar attained beatitude in six days. In such a famous Kshetra a Thevara Goshti will be conducted for six days from 15—2—88 to 20—2—88 during the Mahasivaratri Festival of Sri Kalahastheeswaraswami Devasthanam at Kalahasti and the names of the Thevara Hymnists are given below

1 Thevaramani Thiru. T. ADALARASN Thirumagaal
2 A. SATTAYAPA ODHUVAR, Thirvizhimazhalai
3 P. CHOKKALINGA ODHUVAR, Kalahasti
4 Sangeetha Bushanam, Thiru, S. A. GOPALAN, Flute, Chidambaram
5 Mirudanga Vidwan Thiru, S. A. RAMASAMI PILLAI, Chidambaram

MAY SIVA BLESS ALL

Sri *E. GOPALAKRISHNA* Reddy B. Sc., L. C. M.	*K. SUBRAMNYA IYER* B. A
Asst. Commr Executive Officer	"Thiagaraja Vilasam"
Sri Kalahastiswaraswami Devasthanm	62, Pillaiyar Koil St
KALAHASTI	Triplicane P. O
Andra Pradesh,	MADRAS—600 005.

உழைக்காமல் ஊதியம் கிடைக்குமா?

நெல்லை சிவமணி புலவர். ம. சிவசம்பு. எம். ஏ.,
பாளையங்கோட்டை

உழைக்காமல் செல்வர் ஆகவேண்டும் என்ற எண்ணம் நம்மிடையே மிகுந்து வருவதைப் பார்க்கிறோம். சிலர் சிறிது உழைத்துவிட்டு அதற்கு தகுந்தத் ஊதியம் கிடைக்கவில்லை என்று உழைப்பதைத் நிறுத்திச் சோம்பி இருப்பதையும் பார்க்கிறோம் உழைப்பது என்றால் எவ்வளவு காலத்திற்கு உழைப்பது? நாம் சாகும் வரை உழைக்க வேண்டுமா என்று சலித்துக் கொள்ளுகிறார்கள் சிலர். எடுத்துக் கொண்ட காரியம் பயன் அளிக்கும் வரை நாம் உழைத்துக் கொண்டு தான் இருக்க வேண்டும். சில நேரம் பயன் கிடைக்காமலும் போகலாம். ஆனால் உழைப்பதை நிறுத்தக் கூடாது என்பதற்கு அழகான உவமை ஒன்று சொல்லி விளக்குகிறார் ஸ்ரீ குமரகுருபரர்.

ஒருவர் நோயால் படுத்திருக்கிறார். உயிர் போகும் நிலைமை. சிலர் மருந்து கொடுக்க வேண்டாம் என்றார்கள். அறிஞர் ஒருவர் அங்கிருந்தார். அவர் "இறக்கும் நிலையில் இருக்கும் இவருக்கு வாயில் மருந்து விடுவதால் என்ன தீமை ஏற்படும்? சில நேரம் மருந்து வேலை செய்து உயிர் பெற்று எழவும் வாய்ப்பு இருக்கிறது. முடியாதவைகள் போல இருக்கின்ற சில காரியங்கள் விடாமுயற்சியால் வெற்றி பெறுவதும் உண்டு. அதனால் இறுதிவரை முயல வேண்டும்" என்கிறார்.

உறுதி பயப்ப கடைபோகா வேனும்
இறுவரை காறும் முயல்ப — இறும்உயிர்க்கும்
ஆயுள் மருந்துஒழுக்கல் தீதன்றால் அல்லனமீபால்
ஆவனவும் உண்டு சில.

நீதிநெறி விளக்கம் — 49

உ
சிவ சிவ

மதுரையில் மகா சிவராத்திரி தேவார விழா

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21 ஆவது அதிபர்

கயிலைமாமுனிவர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின்

அருளாணையின் வண்ணம் நடத்தப் பெறுவது.

பிரபவ ஆண்டு மாசித் திங்கள் 4-ம் நாள்
16 - 2 - 88 செவ்வாய்க் கிழமை
மாசி மகாசிவராத்திரி

திருமுறைவாணர்கள்:-

1. கலைமாமணி, தேவார இசைமணி,
திரு. எஸ். முத்துக்கந்தசாமி ஓதுவார், திருச்சி.
2 திருநெறித்தமிழிசை வேந்தர், இன்னிசைமணி
திரு இ. எம். வேதாசலம், சென்னை.
3. திருநெறிய தமிழ்மணி,
திரு தா. குருசாமி தேசிகர், மதுரை.
4. திரு பொன். முத்தையா ஓதுவார், மதுரை
5. திரு அரு. ஞானசம்பந்தம், அவிநாசி.
6. தேவாரமணி, திரு ஆ. சோமசுந்தர ஓதுவார்,
ஸ்ரீ காசிமடம் திருமுறைப்பணி, மதுரை.
7. தேவாரமணி, திரு கு. மணிகண்ட ஓதுவார், மதுரை.
8. தேவார மணி, திரு டி. ஏ திருஞானசம்பந்தன், மதுரை.
9. மதுரை, திரு சண்முகசுந்தரம், மிருதங்கம்
10. மதுரை, திரு பிச்சைப்பிள்ளை, ஆர்மோனியம்.

ஸ்ரீ காசிமடம்
திருப்பனந்தாள்
1-2-88

ஆணைப்படி
R. V. சுப்பிரமணியம்
மானேஜர்

[குறிப்பு] மதுரை ஸ்ரீமீனாட்சியம்மன் சன்னதி ஸ்ரீ சித்தி விநாயகர் திருமுன்பு இரவு 8 மணிக்குத் தொடங்கிச் சிவமே நிலவும் ஆடி நான்கு வீதிகளில் இரவு முழுவதும் திருமுறைவாணர்கள் திருமுறை ஓதிக் காலை 6 மணிக்கு ஸ்ரீ மீனாட்சியம்மன் சன்னதியில் நிறைவு செய்வார்கள்.

குமரகுருபர அடிகள்

வரலாற்றாராய்ச்சி *

20354

கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ., எம். எல்.

அடிகள் வரலாற்றினைத் திட்பமாக அறிதற்கு அகச் சான்றுகள் மிகக் குறைவாகவேயுள்ளன. அவர் புராணம் பாடிய பெரும் பாவலர். பலசெய்திகளைத் தக்க கர்ணபரம்பரைக் கதைகளால் அறிந்திருத்தல் கூடும். திருப்பனந்தாள் மடத்தைத் தில்லைநாயக சுவாமிகள் நிறுவுவதற்கு முன், காசிமடம் எத்துணைச் செல்வமுடைத்தாயிருந்த தென்பது விளங்கவில்லை. திருப்பனந்தாள் மடத்துத் தலைவர்கள் காலமும் பிற விபரமும் சென்னைச் சட்டத் தீர்ப்பறிக்கைப் புத்தகம் பத்தாவதன்கட் காணப்படுகின்றன. சின்னாட்குமுன் திருப்பனந்தாள் மடத்தாரால் வெளியிடப்பட்டுள்ள கந்தர்கலிவெண்பா நூலின் முற்பகுதியுட் சேர்க்கப்பட்டுள்ள ஸ்ரீ காசிமடத்துப் பரம்பரை விளக்கம் நன்கு உற்றுநோக்கத் தக்கது. அவ்விளக்கத்தின்கண் தில்லைநாயக சுவாமிகட்குப் பின் குமரகுருபர சுவாமிகள் ஒருவர் மடாதிபதியாய்த் திகழ்ந்தமையால், காசிக் குமாரசாமிமடம் நிறுவிய பெருந்தகையார் ஆதி குமரகுருபரசுவாமிகள் எனப்பட்டனர். பாண்டிநாடே பழம்பதியாகவும் என்று மணிவாசகப் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய தற்கிணங்கச் சைவமுந் தமிழும் என்றுஞ் சிறப்புற்றோங்குந் தென்னாட்டிலே அவ்விரண்டினுந் தலைவராய்த்திகழ்ந்த குமரகுருபர முனிவர் தோன்றினமை பெரிதும் பொருத்தமானதே அடிகள் காலந் திட்பமாக அறிதல் கூடாதெனினும் அவர் மதுரைக்குச் சென்ற காலை, அவண் ஆட்சிபுரிந்த மன்னன் திருமலைநாயக்கர் என்பது தெளிவு. அடிகள் தமது மீனாட்சியம்மை குறத்தின் இறுதியில்

" நீர்வாழி தென்மதுரை நின்மலனாரருள் வாழி
கார்வாழி யங்கயற்கட் கன்னிதிருவருள் வாழி

---

* பொன்னம்பல முதலியார் மணிவிழா மலரிலிருந்து வெளியிடப் பெற்றது.

சீர்வாழி கச்சிநகர்த் திருமலைபூபதி வாழி
பேர்வாழி யவன்செல்வம் பெரிதூழி வாழியவே ''

என்று வாழ்த்துரைத்தமை காண்க. திருமலைநாயக்கர் காலம் 1623 முதல் 1659 வரை யென்று சரித்திரநூலார் முடிவுகட்டினர். அடிகள் திரிசிராப்பள்ளிக்குச் சென்றபோது, அது ஒரு நாயக்க மன்னனாட்சியிலிருந்த தாகத் தெரிகிறது. கி. பி. 1625ல் திருச்சியை யாண்ட முத்துவீரப்ப நாயக்கன் இறந்தபின் சிலகாலம் அரசியின் ஆட்சியில் திருச்சி இருந்ததாகலின் கி. பி. 1625 வது ஆண்டிற்குச் சில காலத்திற்குப் பின்னேயே அங்கே குருபரனர் சென்றிருத்தல் கூடும். தாயுமான அடிகள் காலம் 1608 – முதல் 1662 வரை யென்பது திண்ணமாயின், அடிகளும் அவரும் ஒரு காலத்தவராவர். ஆனல் ஒருவரையொருவர் சந்தித்தமை நன்கு விளங்கவில்லை. கி. பி. 1644-க்கு மேற் சிலகாலம் தாயுமானவர் திரசிரபுரம் மௌனகுருமடத்திற் றங்கி இருந்தனர். அந்தக் காலத்திற்கு முன்னமே குமரகுருபரனர் திரிசிராப்பள்ளி நீங்கி வடநாடு சென்றிருக்கவேண்டும். ஆதலின் 1630 - 48 கி. பி. யில் அடிகள் தென்னாட்டிலே சைவ சமயத்தை நிலைநாட்டினர் போலும், பிள்ளைப் பெருமாளய்யங்காரும் அடிகள் காலத்தவரே.

அடிகள் பிறந்த ஊர் சீவைகுண்டமென்றழைக்கப் படுகிறது. அவ்வூரின் வடபாகத்திலே கயிலாயநாதர் கோயிலும், சைவர் வாழுந் தெருக்களும் உள்ளன. அப்பகுதி கயிலாயபுரம் என்ற பேர் பெறுதற்குரியதே இத்திருப்பதி திருநெல்வேலியிலிருந்து 18 மைலுக்குக் கிழக்கே தாம்பிரவர்ணிக் கரையிலுள்ளது. அதற்கு மூன்று மைலுக்குக் கிழக்கே ஆழ்வார்திருநகரி இருக்கின்றது. திருச்செந்தூர் சீவைகுண்டத்திலிருந்து 18 மைல் தூரத்திற் கடற் கரையிலுள்ளது. அது முருகக் கடவுளின் ஆறுபடை வீடுகளுட் சிறந்தது. அங்கு வீற்றிருக்கும் பெருமானை இம்மாகாணச் சைவரெல்லாம் குலதெய்வமாக வழிபடுகின்றனர்கள். "நெடுவேள் நிலை இயகாமர் வியன்துறை" "நஞ்செந்தில்மேய வள்ளிமணளன்" என்ற குறிப்புக்கள் முறையே புறநானூற்றிலுந் தேவாரத்திலுங் காணப்படுவன. அடிகள் முதற்கட்பாடிய கந்தர்கலிவெண்பாவினுள், சைவ சித்தாந்த சாரத்தையே தொடக்கத்திற் செவ்விதின் ஓதினமையால், அடிகள் முற்பிறப்பிலேயே சிவநெறி நின்ற பெருந்தவமும், சித்தாந்த உணர்ச்சியும் உடையவரென்பது கருதப்படும். சைவ சித்தாந்த முழுமுதற் பரம்பொருளே திருச்செந்திற் பெருமானென்பதை அடிகள் கலிவெண்பாவினுள் தெள்ளிதின் விதந்தனர். கலிவெண்பாவானது சைவச் சிறுவர் பலராலும்

கல்வியும் அன்பும் விளைதற்பொருட்டும் பிணிகள் நீங்கும்பொருட்டும் இன்றும் நாடோறும் பாராயணஞ் செய்யப்பட்டு வருகின்றது. அடிகள் முருகப்பெருமான் திருவருளை ஐந்தாண்டிற்பெற்றபின், உலகநெறி நில்லாது கடவுட்துறவுபூண்டு சமயநாட்டத் திருப்பணி பூண்டமை, மூன்றாண்டிற்றிருவருள் பெற்ற சமய வேந்தராகிய ஞானசம்பந்தர் அருள்வாழ்க்கையை நினைவுறுத்துகின்றது. அடிகளும் சம்பந்தப்பெருமானைப் போலச் சிவிகை, சின்ன முதலிய வற்றோடு சென்றதாயறிகின்றோம். ஆதலால் அவர் குட்டித் திருஞானசம்பந்த ரெனப்படுதற்குரியர். மதுரையிலே பிள்ளைத் தமிழியற்றியகாலை அம்மையால் முத்தாரமிடப் பெற்று ஆட்கொள்ளப் பெற்றனர். நம்மைப் பாடுவித்ததும் கேட்டதும் அம்மையே யென்று தமது திருப்பாடலொன்றிலே அடிகள் அறிவுறுத்தியுள்ளார். மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை 17ம் பாட்டு :—

" கடம்பவன வல்லி, செல்வக்கற் பூரவல்லி
மடந்தை யபிடேக வல்லி — நெடுந்தகையை
ஆட்டுவிப்பா ளாடலிவட் காடல்வே றில்லையெம்மைப்
பாட்டுவிப்ப துங்கேட்ப தும் " என்றது காண்க.

பிள்ளைத்தமிழென்பது, தமிழிலே சிறுகாப்பிய வகைகள் தொண்ணூற்றாறினுள் ஒன்று. அரசரையும் பெரியோரையும் குழந்தைப் பருவத்தினராகப் பாவித்து அன்பு தோன்றப் பாடுவது போலத் தெய்வத்தைப் பாடுதல் வழக்கமாயிற்று. அங்கயற்கண்ணம்மை தடாதகைப் பிராட்டியாராகத் தோன்றி அருமைச் சிறுபுதல்வியாகத் திகழ்ந்தமையால், பிள்ளைத் தமிழ்க்குரியவாயினள். பிள்ளையைக் காக்கும்படி, காத்தற்கடவுளாய திருமால் முதலிய பல தெய்வங்களை வேண்டும் பகுதி காப்புப்பருவமெனப் படும். குழந்தை இரு கைகளையும், இரு முழந்தாளையு மூன்றித் தலைநிமிர்ந்தாடும் பருவமே செங்கீரைப் பருவமெனப்படும். இது குழந்தை தவழ்தற்குத் தொடங்குங்காலம். இப்பருவமுதற்றான், குழந்தையின் செயல்கள் சிறப்பாகப் பிறரை மகிழ்விப்பன, பெற்றோரும் உற்றோரும், தாலாட்டுவதைக் குழந்தைஅறியும் பருவம் தாலாட்டுப்பருவம், குழந்தை இருகைகளையுங் கொட்டி விளையாடும் பருவம் சப்பாணிப் பருவமெனப்படும். முத்தமிடுவதைக் கண்டு குழந்தை மகிழும் பருவம் முத்தப்பருவம். குழந்தை தளர் நடையுடன் விரும்பினவர்பாற் செல்லும் பருவம் வருகைப் பருவமாம். திங்களைக் குழந்தையொடு விளையாட அழைக்கும் பருவம் அம்புலிப் பருவம், இதுவரை ஆண்பாற் பிள்ளைத்தமிழும், பெண்பாற்பிள்ளைத்

தமிழும் ஒத்த பகுதியுடையன. சிறுவர் விளையாட்டாகிய சிறுவீடழித்தல் சிறுபறை முழக்குதல், சிறுதேருருட்டுதல் என்று மூன்றும் ஆண்பாற் பிள்ளைக்கவியிலும், அம்மானை, நீராடல், ஊசலாடல் என்பன பெண்பாற் பிள்ளைத்தமிழிலுஞ் சிறப்பாகப் பாடப்படும். இவ்வேறுபாட்டை அடிகளுடைய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழையும், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழையும் ஒத்துப் பார்ப்பதாலினிது விளங்கும்.

குறமென்பது முக்காலத்துச் செய்திகளையும் குறத்தி பாடுவதாக அமைக்குஞ் சிறுகாப்பியமாகும், குறவஞ்சியென்பது, இசை நாடகவுறுப்புக்களொடு பாடப் பெறுஞ்சிறுநூல். இரட்டைமணிமாலையென்பது வெண்பா, கட்டளைக் கலித்துறையென்னும் இருவகைப் பாட்டுக்களாற் றொடுக்கப்படுவது. ஒவ்வொரு வகையிலும் பப்பத்துப் பாடல்கள் பாடப்பெறும். இது மாலைபோன்ற பிரபந்தமாதலின் ஒவ்வொரு வகைப் பாட்டொன்றிற்குப் பின் மற்றொருவகைப் பாட்டமைத்துப் பாடுவது. அதாவது இருவகையும் விரவிவருவது. அடிகள் மீனாட்சியம்மைமீதும், சிவகாமியம்மை மீதும் இரட்டைமணிமாலை பாடினர். மும்மணிக்கோவை என்பது மூவகைப் பாட்டுக்கள் விரவி, முப்பது பாட்டுகளால் முடிவது. நான்மணிமாலை என்பது நால்வகைக் கவிகளாற் பாடப்பெற்று நாற்பது பாட்டுக் கொண்டது. அடிகள் பாடிய மும்மணிக்கோவை இரண்டும் நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை, நேரிசை ஆசிரியப்பா என்னும் மூவகைப் பாட்டுக்களுடையன. திருவாரூர் நான்மணிமாலை இவற்றோடு ஆசிரியவிருத்தமும் உடையது. அடிகளுடைய பிரபந்தங்கள், பட்டினத்தடிகளுடைய பிரபந்தங்களை நினைவுறுத்துவன. அடிகளது கலம்பகங்களிரண்டும், அகத்துறைகள் மலிந்துள்ளன கலம்பகமென்பது, பாவும், பாவினங்களும், சொல்லணி பொருளணிகளும் விரவப் பெற்று உலகியலை நன்கு தெரிக்குஞ் சிறுகாப்பியமாகும்; கலம்பகத்திற்கு உறுப்புக்கள் பதினெட்டென்ப அவற்றின் மேலும் உள்ளன. அந்தாதித் தொடையால் அது செய்யப்படுவது. வீரப்புகழ்ச்சிக்காகப் புயவகுப்பு அமைந்துள்ளது. பெண்டிர் விளையாட்டைக் குறிப்பதற்கு அம்மனை, ஊசல் என்னும் புகுதிகள் உள்ளன. மதங்கியார், பிச்சியார், கொற்றியார் குறத்தி, மறவர், கள்ளுண்பார், பாணர், சாலவித்தைக் காரர், தவவேடத்தர், போலிச்சித்தர், வலைச்சியர், இடைச்சியர் முதலியோர் உலகவாழ்க்கையில் மக்களோடுபழகி, மக்கள் குடிவாழ்க்கையிற் கலத்தலின் அன்னோர்க்குரிய பாடல்கள் கலம்பகத்துட் காணப்படும் ஒருதலைக்காமம், தூதுவிடுதல், பிரிவாலிரங்கல் தழைகொடுத்தல் முதலிய துறைகட்குரிய பாடல்

களும் உலகியல் தெரிப்பனவே. உலகியல் நயங்களையுமைத்துக் கற்பார் உள்ளத்தை மகிழ்வித்தற்குக் கலம்பகமே சிறந்த சிறு காப்பியமாகும். பாக்களிற் பலவகுப்புடையமயங்கிசைக்கொச்சகக் கலிப்பா, வஞ்சியினங்கள், மடக்கு, திரிபு முதலியவற்றின் தொன்னயங்களை யேற்றபெற்றி விரிப்பதற்குங் கலம்பகமே இடந் தருகின்றது. கலம்பகம் மக்கள் சார்பாகப் பாடப்படின் நூற்றிற்குக் குறைந்த செய்யுட்களாலும் அமையப்பெறும்.

அடிகளது செய்யுட்கோவையானது எவ்வகைப்பாவின் பல வகைகட்கும் எடுத்துக்காட்டுகளுடையதாய் ஆசிரியரது செய்யுளியற்றும் பெருவன்மை தெரிப்பதாகும். அடிகள் அருட்கவி; இலக்கணங் கற்றவரல்லரென்று ஒருபுலவர் குறைகூறியதைச் சிலர் அடிகட்கு அறிவித்து அவரை இந்நூல் பாடியருளும்படி வற்புறுத்தினமையால் அது பாடப்பெற்றதென்ப, நீதிநெறி விளக்கம் உயரிய செந்தமிழ்ச் சொன்னடை உடையதாய்க் குருபரனரது உலகியலறிவு ஆழத்தையும், அகலத்தையும் உணர்ந்துங் கண்ணாடி போல்வது இதனைப்பற்றி ஓர்கதையுமுண்டு. திருமலை நாயக்கர் ஒரு நாள் உணவுகொள்ளக் காலந்தாழ்த்ததையறிந்த அடிகள் அவரிடம் "வகுத்தான் வகுத்த வகைஅல்லாற் 'கோடி தொகுத்தார்க்குந் துய்த்த லரிது" என்னுந் திருக்குறளை எடுத்தியம்பியனர். அதனைக்கேட்ட மன்னன் "இதுயாண்டுளது" என்று வினவ இது திருவள்ளுவரிலுள்ள தென்றபோது அந்நூல் விரிந்ததாகலின், சுருக்கமான ஓர் அரியநீதி நூலினை அடிகள் பாடித்தர வேண்டுமென்று கேட்டதற்கிணங்கி, அடிகள் நீதிநெறி விளக்கம் பாடினரென்ப. அடிகள் பாடிய துண்டிவிநாயகர் பதிகம் பெரிய விருத்தங்களையுடையது. அதன்கண் வடமொழிக்கலப்பு அதிகமாகக் காணப்படுகின்றது. கயிலைக் கலம்பகம் முற்றிலுங் கிடைத்திலது. அதனையுஞ் சேர்த்து அடிகள் பதினறு பிரபந்தங்கள் பாடினரென்றறிகின்றோம். பதினறு கலைகளையுடைய முழுமதிபோல அவர் நூற்கோவை விளங்குகின்றது.

அடிகள் தருமபுரவாதீனஞ் சென்ற காலை ஆண்டு வீற்றிருந்த மாசிலாமணி தேசிகர் அவ்வாதீனத்து நான்காவது தலைவராய் விளங்கினர். ஆதீன முதற்றலைவர், திருவாரூர் குருஞான

சம்பந்த தேசிகர் என்பார். அவர் திருவாரூரிலே ஞானப் பிரகாசரிடம் மெய்யறிவுரை பெற்றவர். அடிகள் முதற்றலைவரையும், தம நு ஞானசாரியாரையும் வேறுபடுத்தவில்லை என்பது பண்டார மும்மணிக்கோவையாற்றெளியப்படும். முதற்றலைவர் திருப்பதியாகிய திருவாரூர்க்கும், " ஐந்து பேரறிவு " என்னும் பாட்டிற்குரிய தில்லைத் திருப்பதிக்குஞ் சென்று மீண்ட பின், அவர் ஞானோ பதேசம் பெறுவாராயினர். அப்பாட்டின் சொற்பொருளை அடிகள் உணராதவரல்லர். அதன் அனுபவப் பயனையே தேசிகர் பாலுணர்ந்தனர். பெருந் தவத்தினராய அடிகட்கும் அறிவுரை நல்கும் பெருந்தகையாரை யுடைத்தாயிருந்தது தருமபுர ஆதீனம்.

உலகப் பெருஞ்செல்வத்திற் பிறங்கினும், அடிகளைப்போலத் தாழ்மைமிக்க தூயபேரன்பிற் சிறந்த உள்ளமுடையார் வேறொரு வருமிலர் என்பது பண்டார மும்மணிக்கோவையால் தெள்ளிதிற் புலனும், பண்டார மும்மணிக்கோவையைக் கலைமகள் துணை கொண்டு திருவருளினலே தாம்பாடியதாக அடிகள் உரைத்த தோர்க.

" உள்ளத்தருள் நின்றுணர்த்த என்நாவில் உறைந்த வெள்ளை
வள்ளக் கமலத்தவள் மாசிலாமணி வண்புகழில்
எள்ளத் தனையளவோர் தொடையாக்கி யிசைத்தனளாற்
கள்ளப்புலன் கொண்டுரைத்தே னலவிக்கவி முற்றுமே "

அடிகள் திருவாரூரிலே ஞானப் பிறவியெய்தவும், தில்லையிலே கூத்தப்பெருமான் திருஅருட்காட்சி பெறவும், காசியிலே முதல்வ னேடு கலக்கவும், உரிய பெருந்தவத்தினராயினமை காண்க. அடிகள் காசியிலே மடமமைத்துச் சைவத்தை நிலைநாட்டாவிடின் தென்னுட்டுச் சைவசித்தாந்த மொன்றுண்டென்பதை வடநாட்டினர் அறிதற்கிடமிராது. மகம்மதியர் ஆட்சி திறம்பெற்றிருந்த அக் காலத்திலே காசிக்குச் செல்லுஞ் சைவர்க்கு வசதிகள் அமைதல் எளிதன்று.

மொழியுங்குலமுஞ் சமயமும் வேறாக உடைய மக்கள் கூட்டத் தின் நடுவே எல்லா வசதிகளுமமைத்து விசுவேசரை வணங்கும்

பேறுதந்த பெருமான் குமரகுருபர முனிவரே என்பது சைவ உள்ளத்திலே என்றும் நின்று நிலைபெறுதற்குரியது.

அடிகள் காசியிலே நிகழ்த்திய பல அற்புதங்களைப் பற்றிய விவரம் நமக்கு நன்கு கிடைத்திலது. சிங்க முதுகின்மேற் குருபரர் ஏறிச்சென்றமைக் கறிகுறியாகக் காசி மடத்திலே ஒரு கல்வடிவம் அமைந்துள்ளது. இக்காரணம் பற்றியே அம்முத்தி மாநகரின் கண் ஏனைய மடங்களினுங் குமாரசாமி மடத்திற்கு மிகுந்த மதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. புறச்சமயத்தார் நடுவே அற்புதங்களாலன்றி வழக்கீட்டினால், சமயத்தை நிலை நாட்டுதல் அரியதாகும்.

அடிகள் திருச்சிராப்பள்ளியிலே வைணவத்தையும் திருவாரூரிலே சிவசமவாதத்தையும்' தில்லையிலே ஏகான்மவாதத்தை தையும்' காசியிலே துருக்கமதத்தையுந் தழுவிய மக்களோடு வாதிட்டுவென்றனரென்று அறிகிறோம். இவற்றின் இயல்பினைச் சுருக்கியுரைத்து இப்பகுதியை முடிக்கின்றோம்.

வைணவ மதமானது, ஆதியில் சைவசமயத்தின் ஆறு பகுதிகளுள் ஒன்றாயிருந்து, பின் வேற்றியல் படைந்தது அரியையும் சிவசக்தியையும் உடன் பிறந்தாராகக்கூறும் வழக்கம் யாருமறிந்ததே. " அரியலாற் றேவியில்லையையனையாறனார்க்கே" என்ற தேவாரத்தையும், " சிவசக்தியின் புருடவடிவாயவிண்டு " என்னும் காமிகாகமக்கருத்தையும் உற்றுநோக்குமிடத்தே, அரி சமயமானது சிவசத்தியை ஆண்வடிவமாகக் கருதி வழிபட்டாரது நெறியாக ஆதியில் விளங்கிற்றென்று கருத இடமுண்டு, பிற் காலத்தே மும்மூர்த்திகளுள் ஒருவராகிய காத்தற்கடவுள் வழிபாடு தழைத்தோங்கவே, பண்டைவிண்டுநெறி அதனுள்ளடங்கித் தன் வடிவமிழந்தது. இராமகதை, பாரதக்கதை முதலிய கதைகளுங்கலந்தபின் திருமாலுக்குப் பத்துப் பிறப்புக்கூறப் பட்டது. இது ' பிறவித்தோரிலையே " என்ற பரிபாடற்கருத்தொடு முரண்படுவது, பிறக்கின்ற தெய்வம் கடவுளன்றென்பது சைவசித் தாந்தக் கொள்கையாதலின், வைணவம் கடியப்படுவதாயிற்று. மும்மூர்த்திகளுக்கப்பாற்பட்ட அவர்கள் தலைவனைச் சிவனெனவழி படுவோர், மும்மூர்த்திகளுள் ஒருவராயவிண்டுவைத் தலைவனே

டொப்பக் கருதாரென்பது தெளிக. பிற்காலத்தே வைணவமானது ஏகான்மவாதக் கலப்புற்று, சித்துஞ்சடமுமாய உலகனைத்தும் கடவுளிடமிருந்து தோன்றுவதே, சித்துஞ் சடமுங் கடவுளின் பகுதிகளே என்ற விசிட்டாத்துவிதக் கொள்கையைப் பற்றியபோது அக்கொள்கை சித்திலிருந்து சித்தேதோன்றும், சடத்திலிருந்து சடமேதோன்றும் என்னுஞ் சற்காரியவாதத்திற் கிழுக்காமாதலின், சைவ சித்தாந்திகளால் அது மறுக்கப்படுவதாயிற்று. பிள்ளைப்பெருமாளைய்யங்கார் இலக்கண இலக்கியம் வல்லராய்ப் பாவன்மையுடையராய்த் திகழ்ந்த அன்பர். அவர் சாத்திர நுட்பம் உணர்ந்தவரல்லர், தன் திருமால்பத்தி காரணமாகச் சைவத்தை மறுக்க முன்வந்தவர், அவர் எவ்வாறு சைவ சித்தாந்தப் பேராசிரியராய் குமரகுருபரனரை வெல்லுதல் கூடும்?

இக்காலத்தே சைவரும், வைணவரும் தத்தஞ் சமயத்தத்துவக் கொள்கைகளையுணர்ந்து, பண்டைத் தமிழரது திருமால் வழிபாட்டைக் கடைப்பிடிப்பாராயின் இரு சமயத்தார்க்குமுள்ள சமய முரண்பாடு தூரம்போய்த் தூச்சமாய்விடும்.

இனி, சிதம்பரத்திலே குருபரனர் காலத்தே ஏகான்மவாதம் தலையெடுக்கக் காரணம் விளங்கவில்லை. தில்லைவாழ்ந்தணர் ஆதியிலே சிவநெறியைக் கடைப்பிடித்தவர், அவர்கள் சுமார்த்தக் கொள்கையினரல்லர். இக்காலத்திலே அன்னேர் சுமார்த்தரோடு கலக்கக் கருதுகின்றார்கள். அவர்களைச் சுமார்த்தக் கொள்கையினராக்கு முயற்சி அடிகள் காலத்திலேயே நிகழ்ந்தது போலும்; அவர்காலத்தே அது பலிக்கவில்லை. கடவுளின் பெருந்தன்மையையுணர்ந்து, கடவுளோடு அத்துவித பாவனை செய்வோர் கூறியமொழியினைப் பொருள்கொள்ள அறியாது அவற்றிற்குத் திரிவுப்பொருள் கொண்டமையால் ஏகான்மவாதம் உலகிற்றோன்றிய தென்ப. "மண்ணனை மலையானை" என்றால் பொன் பணியாதல் போல, இறைவனே மண்ணாகவுமலையாகவுமானான் என்று கொள்ளின், அது சித்திற்குஞ் சடத்திற்குமுள்ள வேறுபாடறியாமையான் வந்த இழுக்காதல் போலச் சிற்றறிவும், சிறுதொழிலுமுடையன வாய உயிர்களை இறைவனே என்று கோடலும் பெருந்தவறாகும்.

குமரகுருபரர் காட்டும் உழவு*

டாக்டர் கோமதி சூரியமூர்த்தி
(சைவ சித்தாந்தத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்)

முன்னுரை

உயிர்கள் பாசத்தால் பிணிக்கப்பட்டதை அடியொற்றி மூவகைப் படும். ஆணவம் என்ற ஒரு மலத்தால் பிணிக்கப்பட்ட உயிர்கள் விஞ்ஞானகலர் எனப்படும். ஆணவம், கன்மம் என்ற இருமலங் களால் பிணிக்கப்பட்ட உயிர்கள் பிரளயாகலர் எனப்படும். ஆண வம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களால் பிணிக்கப்பட்ட உயிர்கள் சகலர் எனப்படும். உயிர்களின் மலப்பிணிக்கு ஏற்ப அவற்றிற்கு இறைவன் அருள் செய்யும் முறையும் வெவ்வேறாக அமை யும். விஞ்ஞானகலருக்கு இறைவன் உள்நின்று உணர்த்தி ஞானம் வழங்குவான். பிரளயாகலர் முன் தெய்வ வடிவில் தோன்றி ஞானம் அருளுவான், சகலர்முன் மானுடச்சட்டை தாங்கி குருவடி வில் தோன்றி ஞானோபதேசம் செய்வான் என்பது சைவசித்தாந்த கோட்பாடு. குமரகுருபரர் தம் ஞானாசிரியரான மாசிலாமணி தேசிகர் பால் ஞானோபதேசம் பெறுதல் வேண்டும் என்ற வேட்கையுடன் அருளிச் செய்த நூல் பண்டார மும்மணிக்கோவை என்பதாகும்.

அந்நூலில் ஒரு பாடலின் முற்பகுதியில் தம் ஞானாசிரியரை ஒரு உழவனாக உருவகிக்கின்றார் (செ. 11) விதையைக் கொண்டு விளைவு செய்கின்ற உழவன் அந்த விதையின் விளைபயனைக் கருதி உழவுத் தொழிலைச் செய்யுமாறுபோல, உயிர்களாகிய விதைகள் பயன்பெறும் பொருட்டு இறைவனாகிய உழவன் செய்யும் தொழிலை அப்பகுதியில் அழகாகக் காட்டுகிறார் குமரகுருபரர். அப்பாடலின் பிற்பகுதியில் அவ்வுழவன் வளர்த்த ஒரு மரம் பற்றியும், அதன் பகுதி களையும், அவற்றால் பலன் துய்ப்போரையும் விளங்கக் காட்டுகின்றார். குமரகுருபரர் காட்டும் இவ்வுழவுத்தொழில் சித்தாந்த நோக்கில் இக்கட்டுரையில் விளக்கப்படுகின்றது.

விரிபொருளும் சித்தாந்த விளக்கமும்

மாயையாகிய நிலப்பரப்புடைய ஒரு பெரிய நாடு உள்ளது. அந் நாட்டிலே சுத்தமாயை, அசுத்தமாயை பிரகிருதிமாயை என்னும் மூன் றன் புவனங்களாகிய மாகாணங்கள் பல உள்ளன. நிலவுலகில் வயல்

---

* உழவாரம் இதழில் வெளிவந்தது. நன்றி - உழவாரம்.

கள் தகுதிக்கேற்ப பலவாறுகப் பகுக்கப்பட்டிருக்கும். உயிர்கள் தாம் செய்த வினைப்பலனுக்கேற்ப நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு, எண்பத்து நான்கு லட்ச யோனி பேதங்களாகிய பிறவி வேறுபாடுடையன (சிவப்பிரகாசம் செ. 17) அப்பிறவி வேறுபாடு களையே வயல்களாக உருவகிக்கின்றுர் குமரகுருபரர். நால்வகை தோற்றங்களாவன; அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பனவாம், அண்டசம் என்பது முட்டையில் தோன்றுவன. உற்பிச்சம் என்பது, வித்திற் பிறப்பன. சராயுசம் என்பது கருப்பையில் பிறப்பன. ஏழுவகைப் பிறப்பும் யோனிபேதங்களும் பின்வருமாறு:

1	தேவர்	— பதினெரு லட்ச பேதம்
2	மனிதர்	— ஒன்பது லட்ச பேதம்
3	விலங்கு	— பத்து லட்ச பேதம்
4	பறவை	— பத்து லட்ச பேதம்
5	ஊர்வன	— பதினைந்து லட்ச பேதம்
6	நீர்வாழ்வன	— பத்து லட்ச பேதம்
7	தாவரம்	— பத்தொன்பது லட்ச பேதம்.

வயல்களில் விதைகள் விதைக்கப்பட்டுப் பயிர்வளர்க்கப்படும். நால்வகைத் தோற்றம், ஏழ்வகைப்பிறப்பு, எண்பத்து நான்கு லட்ச யோனிபேதமாகிய வயல்களில் உயிர்களாகிய விதைகள் நடப்பட்டு பிறவிகளாகிய பயிர்கள் வளர்கின்றன.

பயிருக்குப் பாய்ச்ச நீர்நிலை வேண்டும். உயிர்களாகிய பயிர்கட்கு ஊழ் என்னும் ஆழமான நீர்நிலை உள்ளது.

நீர்நிலையிலிருந்து வயல்கட்குத் தண்ணீர் மதகுகளின் வழியாகப் பாய்ச்சப்படும். உயிர்கட்கு வினைப்பலன் மூவித வாயிலாக வரும். அவை ஆதிதைவிகம், ஆதிபௌதிகம், ஆதி ஆத்மிகம் எனப்படும் (சிவப்பிரகாசம், செ. 29) ஆதிதைவிகம் என்பது பேய், பூதம், தீயதெய்வங்கள் முதலியவற்றுல் வருவது. ஆதிபௌதிகம் என்பது ஐந்து பூதங்களால் வருவது ஆதியான்மிகமாவது தன்னுலும் பிற உயிர்களாலும் வருவது வினைபபயன்வரும் வாயில்களான இம் மூன்றையும் மதகுகளாக உருவகிக்கின்றுர் குமரகுருபரர். உழவன் மதகுகளை அவ்வப்போது திறந்து கால்வாய் வழியாக மடையின் இடையே பருவம் பார்த்து வயல்கட்கு நீர்பாய்ச்சுவான். பெரிய நீர் நிலையில் ஊற்றுச் சுரந்து நீர் பெருகி வெள்ளம் பெருக்கெடுத்தோடி ஞல் அந்நீரை அணைகட்டி ஏரிகளில் பாய்ச்சுவர் அதைப்போல இறைவனும் முற்கூறிய மூன்று மதகுகளை அவ்வப்போது திறந்து ஆசையென்னும் கால்வாய் வழியாக நுகர்பொருள் என்னும் புதுப்

புனல் கொணர்ந்து அதனை ஐம்பொறியென்னும் மடையின் இடையே பருவம் பார்த்துப் பாய்ச்சுகிறான். உயிர்களிடத்து விருப்பு, வெறுப்பு என்னும் இரண்டு ஊற்றில் புதுப்புனல் பெருகி வெள்ளம் புறம்போந்தோட அப்புனலை மந்திரம், பதம், வர்ணம் புவனம்' தத்துவம், கலை என்னும் ஆறுவகை ஏரிகளில் நிரப்புகின்றான்.

விளைகின்ற பயிரை விளையவைத்து அறுத்து உரிய இடங்களில் சேர்ப்பான் உழவன். இறைவனே உயிர்களை ஆகாமிய வினையை விளையச்செய்வித்து விளைந்த பிராரத்தத்தை அதற்குரிய உயிர்களிடம் சேர்ப்பித்து அநுபவிக்கச் செய்து அறுக்கிறான். பாடலில் வரும் விளைவன என்பது ஆகாமியத்தையும் விளைந்தன என்பது பிராரத்தத்தையும் குறிக்கும்.

இறைவன் உயிர்கட்கு அருளுமாற்றல் புவனங்களையும், நால் வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்புக்களையும் எண்பத்து நான்கு நூறாயிரம் பிறவி வேறுபாடுகளையும் அமைத்து, வினைவகை களையும் அவற்றின் பயனை நுகர்வித்தலையும் பிறவற்றையும், ஒரு நாடு நாட்டின் பகுதி, நீர்வரும் பெரிய வாய்க்கால், வயல்தரம், வயல்கள், பயிர், மதகு வாய்க்கால், புனல், புனலடைப்பதும் விடுப்பதும் செய்யும் மடை, ஊற்று ஏரி, முதலியவற்றால் உருவகம் செய்து, குமரகுருபரர் இறைவனை ஒரு களம் செய்யும் உழவனாகக் காட்டுவது நம் உள்ளத்தை அள்ளும்.

இனிப் பாடலின் பிற்பகுதியினைக் காண்போம். பல உயிர்களும் பயன் கொண்டுய்யும் வண்ணம் குடிலை என்ற பெரிய வயலிலே அருளாகிய வித்தினையிட்டுக் கருணையாகிய நீரைப் பாய்ச்சி ஞான நூலெனும் மரத்தினை ஞானாசிரியர் வளர்த்தாராம். அம்மரத்தின் பயன் பலவாம். அம்மரத்தின் இலையை மட்டும் பறித்துப் பயன் பெற்றனர் பலர். தளிரைப் பறித்தவர் பலர், அரும்பை மட்டும் பெற்றனர் பலர் மலரைப் பறித்துப் பயன்படுத்தியவர் பலர். வேறு பலர் பிஞ்சையும், அருங்காயையும் பறித்துப் பயன் படுத்தினர். இவ்வாறு ஆறு பகுதியும் அறுவகையோர் கொள்ள நுண்ணிதின் ஆய்தற்குரிய வேதமரத்தின் முடிவாகிய வேதாந்தமென்ற உச்சியிற் பழுத்த தெவிட்டாத பேரின்ப அருங்கனியைப் பிழிந்து அதன் சாறாகிய சைவசித்தாந்தத் தேனமுதைப் பருகினவர் ஒரு சிலரே என்கிறார்.

இப்பகுதியில் குமரகுருபரர் குடிலை எனப்படும் சுத்தமாயையை வயலாகவும், அருளை வித்தாகவும், கருணையை நீராகவும், ஞான

நூலினை (வேதம்) மரமாகவும் உருவகிக்கின்றார். அந்த வேதமாகிய மரத்தின் இலை, தளிர், அரும்பு மலர், பிஞ்சு, அருங்காய் என அறுகு வகைச் சமயங்களை உருவகிக்கின்றார். உச்சியிலுள்ள கனியின் தேனமுது சைவ சித்தாந்தமாம்.

இங்கு வேதத்திற்குப் புறம்பான சமயங்கள் பொருளையே அறிவதில்லை என்றும், வேதத்திற்கு உட்பட்ட சமயங்கள் பொருளைப் பலபல நிலையில் அறிகிறதென்றும், வேதப்பயனாகவுள்ள உபநிடதங்களே உண்மையை உணர்த்துவன என்றும், அந்த உண்மைப் பயனை சைவசித்தாந்தம் கூட்டி வைக்கின்றது என்றும் உணர்த்துகின்றார்.

"புறச்சமயத் தவர்க்கிருளாய் அகச்சமயத் தொளியாய்ப்
புகல் அளவைக் கனவாகி"

என்ற சிவபிரகாச திருவிருத்தம் (செ. 7) நினைவு கூரத்தக்கது. மேலும்.

"அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய்"

சிவஞான சித்தியார் சுபக்கம் 2) என்றபடி பலசமயங்களும் கூறுவது ஒரு பொருளையே என்றும், அவற்றுள் ஒவ்வொன்றும் வளர்ச்சி நிலைக்கேற்ப வகுத்துக் கொள்ளப்பட்டன என்றும் காட்டுகின்றார் இப் பகுதி மூலம்,

"வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறனிங்கு
தெரிவிக்க லுற்றும்" (சிவபிரகாசம், செ. 7)

என்ற சிவப்பிரகாசத் திருவிருத்தத்தை நமக்கு நினைவு படுத்துகின்றார்.

முடிவுரை

பாடலின் முற்பகுதியில் இறைவணங்கிய உழவன் உயிர்கட்கு அருளுமாற்றையும், பிற்பகுதியில் அவ்வுழவன் வளர்த்த வேதமாகிய மரத்தின் பல உறுப்புக்களிலிருந்தும் வைதிக சைவத்தின் பிரிவுகளைச் சார்ந்தோர் தத்தம் பக்குவத்திற்கேற்றவாறு பயனைப்பெற்றனர் என்பதையும் உணர்த்துகின்றார். சித்தாந்த சாத்திரங்கள் பல கற்றுப் பெறவேண்டிய தெளிவியலறிவைக் குமரகுருபரர் பண்டார மும்மணிக்கோவையிலுள்ள இந்த ஒருபாடல்மூலம் நமக்கு உணர்த்துவது இன்பம் பயப்பதாகும் ஒரும் வேதாந்தம் என்றுச்சியிற் பழுத்த ஆரா இன்ப அருங்கனி பிழிந்து சாரங்கொண்ட சைவசித்தாந்தத் தேனமுதைப் பலரும் அருந்தச் செய்வதே நம் பணியாக விளங்கட்டும்.

ஸ்ரீ காசி ஸ்ரீ குமாரசுவாமி மடத்திற்குச் சொந்தமான

அருள்மிகு கௌரியம்பிகை உடனுய அருள்மிகு கேதாரீஸ்வர்

திருக்கோயில் திருப்பணி

சொல்லாவது மறையே சொல்லுவது நல்லறமே
இல்லாவது முத்திக்கு ஏதுவாம் இத்தலமே
அல்லார் குழலளவு மாசிகொன் மனம்வயிரக்
கல்லா இருந்தவா காசிப் பிரானுர்க்கே.

காணும் காணும் நதிகளெல் லாம்புனற் கங்கையே
அங்குளதெய்வம் யாவையும்
தாணு எங்கள் அகிலேசரே மற்றைத்
தலங்கள் யாவும் தடமதிற் காசியே.

— ஸ்ரீ குமரகுருபரர்.

உலகில் உள்ள புண்ணியத் தலங்கள் யாவற்றினும் உயர்ந்தது எனப்போற்றப் பெறுவதும், முத்தித்தலம் என அநாதிகாலம் முதல் கூறப்பெறுவதும், வருணைஎன்ற ஆற்றுக்கும் அசி என்றஆற்றுக்கும் இடையில் விளங்குவதால் வாரணசி எனப் பெயர் பெறுவதும், வேத ஆகம புராண இதிகாசங்கள் யாவற்றிலும் போற்றித் துதிக்கப்பெறுவதும், புண்ணிய பாரத பூமியின் உத்தர பிரதேசத்தில் விளங்குவதுமாகிய ஸ்ரீ காசி நகரத்தை ஓங்காரம், விஸ்வநாதம், கேதாரம் என முப்பிரிவுகளுடையதாகக் கேதார மகாத்மியம் கூறும். அவற்றுள் தெற்குப் பகுதியாகிய கேதாரத்துள் அருள் ஞானியாகிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஸ்ரீ குமாரசுவாமி மடம் அமைத்து அருளாட்சிபுரிந்த காலத்தில் மன்பதைகள் உய்யும் பொருட்டு ஸ்ரீ கேதாரகட்டத்தை

யும், ஸ்ரீ கேதாரீஸ்வரர் திருக்கோயிலையும் கற்றளி செய் தருளினார்கள். இமயத்து எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கேதா ரீஸ்வரரே ஸ்ரீ மாந்தாதா முனிவரின் அன்னதானச் சிறப் பைப் பாராட்டும் வகையில் ஸ்ரீ காசியில் கோயில் கொண் டருளிய திறமும், 61 முறைகள் கேதார யாத்திரை செய்த வசிட்டர் காசியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கேதாரீஸ் வரரை வணங்குவது ஏழுமடங்கு பலன்தரும் என்றறிந்து உய்ந்ததிறமும் புராணங்கள் கூறுவன. பதினாறுகலைகளுள் காசியில் உள்ள ஸ்ரீ கேதாரீஸ்வரர்பால் 15 கலைகளும் இமயத்துள்ள ஸ்ரீ கேதாரீஸ்வரர்பால் ஒரு கலையும் உள்ள தாக ஐதீகம். இவ்வண்ணம் மூர்த்தி தலம் தீர்த்தம் என் னும் முப்பெரும் சிறப்புகளும் நிறைந்த ஸ்ரீ கேதாரீஸ்வரர் திருக்கோயில் ஸ்ரீ குமாரசுவாமி மடத்திற்குச் சொந்தமான தாக விளங்குகிறது. பல்லாயிரக் கணக்கான பக்தர்களால் நாளும் வழிபாடாற்றப் பெறுகிறது. திருவருள் துணை கொண்டு ஸ்ரீ காசி கேதாரகட்டத்து ஸ்ரீ கேதாரீஸ்வரர் திருக்கோயிற்குத் திருப்பணிசெய்து **அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்** செய்விக்க, ஸ்ரீகாசிமடம் 21 ஆவது அதிபர்

'கயிலைமாமுனிவர்' ஸ்ரீ ல ஸ்ரீ காசிவாசி

முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருவுளம் பற்றியுள்ளார்கள்.

பக்தர்கள் இப்புண்ணியப் பேற்றில் பங்குகொள்ளும் வண்ணம் பெருமளவில் நன்கொடைகள் வழங்கி நலம் பெறுவார்களாகுக.

அருளாணைப்படி,
N. கிருஷ்ணமூர்த்தி அய்யர்
ஏஜண்டு, ஸ்ரீ குமாரசுவாமி மடம், வாரணசி.

நன்கொடைஅனுப்பவேண்டிய முகவரி:—

1 மேலாளர், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள் 612 504.

2. Agent, Sri Kumaraswamy Mutt,
Kedar Ghat, VARANASI—221 001

குமரகுருபரர் கண்ட காசிமாநகரம்

தா. ம. வெள்ளைவாரணம், திருப்பனந்தாள்

காசிக்கு நேரிற் செல்லாவிடினும் காசியைப் பற்றிக் கேட்டறியாத தமிழர் இரார். சங்க நூல்களில் ஒன்றான கலித்தொகையுள் காசி நகரம் "வாரணவாசி" என்னும் சொல்லால் குறிக்கப்பட்டிருக்கிறது. சங்க காலத்துக்கு முன்பே தமிழர்க்கு அறிமுகமான இவ்வூர்க்குக் கங்கை நீராடும் பொருட்டு யாத்திரை செல்வது பெரும்புண்ணியமாகக் கருதப்படுகிறது.

காசிக்குச் சென்ற குமரகுருபர சுவாமிகள் பாதுஷாவிடம் இடம் பெற்று மடமொன்று அமைத்துப் பலதருமங்களை நடத்தியும் தமிழிலும் இந்தியிலும் சொற்பொழி வாற்றியும் தமது ஆயுட் காலம் வரை அங்கே தங்கியிருந்தவர்கள். ஆகவே காசி நகரைப் பற்றிச் சான்றோர்வாய்க் கேட்டும் நேரிற் கண்டும் தாமறிந்த பல செய்திகளுள் சிலவற்றைத் தாம் இயற்றிய காசிக் கலம்பகம் என்னும் நூலில் பதிவித்துள்ளார்கள். அந்நூலின் துணை கொண்டு, அவர் கண்ட காசிமா நகரம் பற்றி இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

காசிமா நகரம்:

பாதுஷாவின் தலைநகராய்ச் செ வச் சிறப்பு உடையதாய் இருந்ததால் காசியைக்குறிக்கும் பே "காசிக் கடிநகரம், காசித் தடம்பதி, காசி வளம்பதி, காசிமா ..கரம், காசிநன்நகர்" என்று குருபரர் குறிப்பிடுகிறார். இக்காசி நகரம் கங்கை யாற்றை அகழியாய்ப் பெற்று ஏழு மதில்களையும் உடையதாக இருக்கிறது என்பதை," கங்கை குண்டு அகழியா நெடுங் ககன நீள் குடுமி மதில்கள் ஏழுடைய காசி" என்னும் தொடரால் அறிவிக்கிறார்.

மற்றும் இந்நகரத்தைச் சுற்றிச் சோலைகளும் வயல்களும் கொண்ட காட்டுப் புறமான இயற்கைச் சூழலையும் கொண்டிருப்பதால் "காசிப்புரம், காசித்திருநாடு" என்றும் குறித்துள்ளார்.

இக்காசிநகரின் தெருக்களில் பிச்சை ஏற்கும் கொற்றியார், பிச்சை ஏற்கும் பிச்சியார், வாள் வீசி விளையாட்டுக் காட்டும் மதங்கியார் என்போர் திரிகிறார்கள். அவர்களுள் கொற்றியார் காசிநகரத்தின் வளத்தைக் கொழுத்த தமிழில் பாடுகிறாள். இச் செய்திகளை,

"... ... .. காசிவளமை எல்லாம்
கொழுத்ததமி ழாற்பாடித் துளசிமணி தரித்தாடும்
கொற்றியாரே"

என்றும்,

"தண்ணுலாம்பொழிற் காசித் தெருவில் நீர்
தரித்திடும் தவக் கோலமும் சூலமும்
பெண்ணொ டாடும்அப் பிச்சனுக் கொத்தலால்
பிச்சி யாரெனும் பெயர்தரித் தாடுவீர்"

என்றும்,

"மடலவிழ்பூம் பொழிற்காசி மணிமறுகில்
விளையாடும் மதங்கியாரே"

என்றும் குருபரர் பாடியிருக்கிறார்.

இந்தி மொழி பேசும் காசிநகரில் கொழுத்த தமிழாகிய செந் தமிழில் காசிவளத்தைக் கொற்றியார் பாடினார் என்பதைக்கேட்க வியப்பாக இருக்கலாம். கொற்றி பிச்சி மதங்கி என்பன கற்பனை உறுப்புகள் ஆகலின் இப்படிப் பாடியிருப்பார் எனச்சிலர் நினைக் கலாம். ஆனால் இது உண்மை. காசி முத்தித்தலமாதலின் தமிழர் பலர் காலங்காலமாக அங்கே யாத்திரையாகச் செல்கின்றனர். பலர் அங்கேயே ஆயுள் முழுதும் தங்கியும் விடுகின்றனர். அதனால் காசியில் தமிழர்களும் வாழும் வாய்ப்பு இருந்ததால் கொற்றியார் தமிழ் பாடிதாகக் கூறப்பட்டதில் வியப்பு இல்லை.

குமரகுருபர சுவாமிகளே காசியில்தங்கி இருந்து காசிக்கலம்பக மாகிய நூலைக் கொழுதத - செந்தமிழில் பாடியிருக்கிறார்களே! அந்த நூலை அக்காலத்தில் சுவைத்தறியும் தமிழர்கள் காசியில் வாழ்ந்து தானே இருப்பார்கள்!

காசியின் வளமை;

காசி நகரைச் சுற்றிச் சோலைகளும் வயல்களும் நிரம்பி உள்ளன. சோலைகள் மேகத்தைத் தொடும் அளவு உயர்ந்து ஓங்கி உள்ளன. சோலைகளில் மலர்கள் ஏடு அவிழ்ந்து தேனைச்சொரி

கின்றன. எங்கும் குளிர்ச்சியாக இருக்கிறது இங்குள்ள கமுகஞ் சோலையில், பாக்குக் குலைகள் முற்றித்தங்களின் கனத்தால் கமுகின் தலையை வளைத்து விடுகின்றனவாம் மற்றும் இங்குள்ள வயல்கள் நீர் வளத்தால் சேறு மிகுந்திருக்கின்றன வயல்களில் தாமரை பூத்திருக்கின்றன. இச்செய்திகள் பின்வரும் தொடர்களால் அறிய வருகின்றன.

"புயலார் பொழிற்காசி"
"மடலவிழ் பூம்பொழிற் காசி"
"செழுந்தேன் ஒழுகு பொழிற் காசி"
"தண்ணுலாம் பொழிற் காசி"
"பழுக்காய் முழுத்தாறு, கொழுங் கமுகின்
தலைவளைக்கும் பொழிற் காசி"
"அள்ளல் வயற் காசி"
"கஞ்ச மலர் வயற் காசி"

தலச் சிறப்பு

"காணும் காணும் நதிகளெல்லாம் கங்கைநதி ஆய்விடுமா? அவ்வத்தலங்களிலே உள்ள தெய்வமெல்லாம் அகிலேசர் ஆவரோ? பிற பிற தலங்கள் எல்லாம் காசி ஆய் விடுமா?" என்று வினவுகிற பாங்கில், மூர்த்தி தலத்தீர்த்தங்களின் சிறப்பைக்குருபரர் எடுத்து ரைப்பது சுவைத்தற்கு உரியதாக இருக்கிறது.

காசிக்குரிய அவிமுத்தம், ஆனந்தவனம் என்ற வேறு பெயர் களையும் காசிக்கலம்பகம் தெரிவிக்கிறது.

கடலை ஆடையாக உடுத்த நிலமகளுக்குக் காசிநகரம் ஒரு அணியாகத் திகழ்கிறது என்று குமரகுருபரர் குறிக்கிறார்.

"சீர்கொண்ட கடலாடை நிலமகளுக்கு அணியான
கார்கொண்ட பொழிற்காசிக் கடிநகரம்"

காசி முத்திதரும் தலம் என்பதனை "முத்திக்கு ஏதுவாம் இத் தலம்" என்று காசிக்கலம்பகம் தெரிவிக்கிறது.

காசியில் இறப்போர்க்கு எமதண்டனை கிடையாது. வயிரவர் தண்டனை மட்டுமே. இதனை "வயிரவர் தம் சாதனமும் பொய்யாமோ" என்னும் அடியில் குறிப்பால் குருபரர் தெரிவிக்கிறார். சாதனம் - தண்டனை.

"தவம் எதுவும் செய்யாமல் முத்தி பெறவேண்டுமா? நீங்கள் காசியில் தங்குங்கள் அங்கே எதனையும் செய்ய வேண்டியதில்லை. வெறுமனே நெடுந்துயில் செய்தால் (இறந்தால்) போதும் உங்களுக்குப் பதமுத்தி கிட்டும் நீங்கள் பிரமர்க்குத் தலைவராகலாம். பிரமன் உங்களுக்கு வேலைக்காரப் பயலாக ஏவல் செய்வான்" என்கிறார் குருபரர்.

" ... ... காசியிலே
செயலாவது ஒன்றிலை வாளா நெடுந்துயில் செய்யும்; உங்கள்
பயலாகவே பணிசெய்வார் புவனம் படைப்பவரே."

கங்கை நதியின் சிறப்பு:-

கங்கையாறு காசிநகரின் கிழக்குப்பகுதியில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி உத்திரவாகினியாக ஓடுகிறது. காசியின் தெறகே அசி என்ற சிற்றாறும் வடக்கே வருணை என்ற சிற்றாறும் ஓடி வந்து கங்கையில் கலக்கின்றன. இங்ஙனம் வருணைக்கும் அசிக்கும் இடைப்பட்டதாய்க் கங்கை நதிக்கு மேல் புறத்ததாய்க் காசிநகரம் அமைந்திருக்கிறது. உத்திர வாகினியாய் அமைந்த கங்கைப் பகுதியில் அசிக்கட்டம் முதல் வருணைக்கட்டம் வரை அறுபத்து நான்கு கட்டங்கள் (நீர்த்துறைகள்) உள்ளன இவற்றுள் மணி கர்ணிகை என்னும் கட்டம் மிகவும் சிறப்புடையது.

குருபரர் தமக்கு ஒரு ஆசை உண்டு என்றும், அது யாது எனில், உடல் விடும்போது (சாகும் போது) மணிகர்ணிகைக் கட்டத்திலே பொருந்த வேண்டும் என்பதுதான் என்றும், அதன் பிறகு பேயோடு கூடி ஆடும் பிறப்பு வந்தாலும் பேயோடு ஆடச் சம்மதம்தான் என்றும் கூறி மணிகர்ணிகையின் சிறப்பை உணர்த்துகிறார்.

"பூணும் ஆசைமற்று ஒன்றே; உடல் விடும்
போது நன்மணி கர்ணிகைப் பூந்துறை
பேணுமாறு பெறவேண்டும்; அப்புறம்
பேயொ டாடினும் ஆடப் பெறுதுமே."

கங்கை நதியில் வாழும் சங்குகள் நதித்துறைகளில் ஏறி வெண்மையான முத்துக்களை ஈன்று செல்கின்றன. பின்னர் நதிக்கரைக்கு வந்த (சிறகுவாய்ந்த) மடவன்னங்களும் மற்றும் சில குருகுகளும் தாம் ஈன்ற முட்டைகளோடு, சங்கீன்ற முத்தையும் முட்டை

என்று கருதி இரண்டையும் அணைத்து அடைகாத்துத் துயில்கின்றன. இப்படி ஒரு கற்பனைக் காட்சியைக் குருபரர் கங்கைக் கரையில் காட்டுகிறார்.

"குடவளை துறைதொறும் உடுநிரை எனவிரி
குளிர்நில வெழஉமிழ் முத்தைத் தடங்கரை
குலவிய படர்சிறை மடஅன மொடுசில
குருகுகள் சினையொடு அணைத்துத் துயின்றிடும்"

விசுவநாதரும் விசாலாட்சியும்

காசியில் கோயில் கொண்டருளும் பெருமானின் பெயர் விசுவநாதர். இதனைப் பலரும் அறிவர். இவரின் வேறு பெயர்களாக அகிலேசர், அவிமுத்த வாணர், ஆனந்த வனத்தார், காசிஆண்டகை, காசி உடையார், காசி உத்தமர், காசிக் கடவுள், காசிக் குழகர், காசிச் செல்வர், காசிச்சிவக்கொழுந்து, காசிச் சிவபெருமான், காசி நாதர், காசிப்பிரான், காசி முதல்வர், காசி வரதர், காசிவாணர், காசிவேதியர் என்பனவும் காசிக்கலம்பகத்துள் வந்துள்ளன.

காசியில் உறையும் இறைவியின் பெயர் விசாலாட்சி. இப்பெயரைத் தமிழாக்கம் செய்து "பெருந்தடங்கண்ணி" என்று, குருபரர் குறிக்கிறார்.

காசியில் உயிர் விடும் தருவாயில் உள்ள ஒருவரின் தலையை விசுவநாதர் தனது இடக்கையால் அணைத்து மடியில் வைத்துக் கொள்வார். விசாலாட்சி தனது முன்தானையால் விசிறி மோகம் முதலியவற்றை நீக்குவாள். விசுவநாதர் ஓம் என்னும் மறைப் பொருளை உபதேசித்து அவ்வுயிரை முத்தியடைவிப்பார். இச் செய்தியைக் குருபரர் பின்வரும் செய்யுட் பகுதியில் வைத்து

"ஐவளி பித்தெனும் அவைதலை எடுப்ப
மெய்விட்டு ஐவரும் கைவிடும் எல்லையில்
... ...
இடக்கையின் அணைத்துநின் மடித்தலத் திருத்தி
உலகமோர் ஏழும் பலமுறை பயந்தும்
முதிரா இளமுலை முற்றிழை மடந்தை
ஒண்டொடித் தடக்கையின் வீசும் நுண்துகில்
தோகையிற் பிறந்த நாகிளந் தென்றல்
மோகமும் தளர்ச்சியும் தாகமும் தணிப்ப
மறைமுதற் பொருளின் இறைமொழி யமுதினை
அஞ்செவி மடுத்துண வூட்டிநின்
குஞ்சித அடிக்கீழ் குடியிருத் துகவே"

"விசுவேசர் தனது மனைக்கிழத்தியான விசாலாட்சியுடன் இல்லறம் நடத்துகிறார். தனது சொத்தான முத்திச் சரக்கறையைக் கொள்ளை கொள்ளுங்கள் என்று சிலருக்குக் கொடுத்துவிடுகிறார். உலகுயிர்களான அனந்த கோடி பிள்ளைகளுடன் வாழும் மனைவிக்குக் குடும்பம் நடத்து என்று சொல்லி இரு நாழி நெல்லை மட்டும் கொடுக்கிறார் அதைக் கொண்டு முப்பத்திரண்டறமும் செய் என்றும் ஆணையிடுகிறார் இந்தப் பெருந்தன்மை மிக அழகாக இருக்கிறது" என்று குருபரர் புகழாப் புகழ்ச்சியாக உரைத்திருப்பது சுவைக்குரியதாகிறது.

"கொள்ளையிடச் சிலர்க்குமுத்திச் சரக்கறையைத்
திறந்துகொடுத்து அனந்த கோடிப்
பிள்ளைகள்பெற் றுடையபெரு மனைக்கிழத்திக்
கேகுடும்பம்பேணு கெண்ணு
உள்ளபடி இருநாழி கொடுத்ததில்எண்
ணன்கறமும் ஓம்புக என்றார்
அள்ளல் வளவயற்காசி ஆண்டகையார்
பெருந்தன்மை அழகி தாமே.

"காசி விசுவநாதர் சுந்தரரின் தேவாரத்தைக் கேட்டுகந்த தமது திருசெவியில் எமது கவிதையும் கேட்டு ஆட்கொண்டார்" என்று குருபரர் காசிக்கலம்பகத்தில் குறிப்பிடுகிறார்.

"தூது கொண்டும் தமைத்தோழமை கொண்ட
தொண்டர் தண்டமிழ்ச் சொற்கொண்ட குண்டலக்
காது கொண்டுஎம் கவிதைகொண் டாட்கொண்ட
காசி நாதர்."

இக்குறிப்பினால், காசிக்கலம்பகம் பாடுதற்கு முன்பே குமர குருபரர் காசிவிசுவநாதர் மேல் வேறோர் கவிதைப் பிரபந்தம் பாடி அவர் முன் அரங்கேற்றியிருக்க வேண்டும் என்னும் குறிப்பு உணர வேண்டியிருக்கிறது.

காசி நகரம் பற்றிய செய்திகளில் குமரகுருபர சுவாமிகளால் குறிக்கப்பட்டனவாய் அமைந்தவை மட்டுமே மேலே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள்ளே காசியில் செந்தமிழ் வழங்கிய செய்தியும், குமரகுருபர சுவாமிகள் விசுவநாதர் மேல் மற்றோர் பிரபந்தம் செய்து அரங்கேற்றிய செய்தியும் குறிப்பிடத்தக்கன வாகும்.

ஒரு பாடல்

பொன். முத்தையன், எம். ஏ , எம். பில்.
திருவிடைமருதூர்

இறைவன் எவ்வாறு உலகினைப் படைக்கிறான்? எவ்வாறு காக்கின்றான்? எவ்வாறு அழிக்கின்றான் உயிர்களை எவ்வாறு மறைக்கிறான் உயிர்களுக்கு எவ்வாறு அருள்கின்றான் இவ்வைந்து வினாக்களும் சிலவாழ்நாள் பல்பிணிச் சிற்றறி வினராகிய நம்மனோர் பால் இயல்பாக எழுகின்றன. இவைமட்டும் தானா? இல்லறம் என்றால் என்ன? துறவறம் என்றால் என்ன? எங்கே முத்தி கிடைக்கும்? பரம் பொருளின் அருள் தன்மை எவ்வாறு இருக்கும்? என்பன போன்ற வினாக்களும் நம்பால் அவ்வப்போது எழாமல் இல்லை. பல்வேறு காலங்களில் தோன்றிய சமயப்பெரியார்கள் பலர் இவ்வினாக்களுக்கு விடை சொல்லியுள்ளனர். இவ்வினாக்கள் அனைத்துக்கும் ஒருசேர விடை சொல்வதுடன் பரம்பொருளாம் சிவனின் கருணையில்பினைத் தக்க உவமை யொன்றன் மூலம் உணத்துகின்றார் ஒரு பெரியார். இவையனைத்தும் ஒரே பாடலில் அழகுறத்தொடுத்த மாலைபோல் அமைந்துள்ளன. அந்த ஒரு பாடலைக் காண்போம்!

எல்லை நீத்த உலகங்கள் யாவையும் படைத்த எம்பெருமான் தில்லையில் கூத்தாடுகின்றான். சிற்றம்பலத்தில் அவன் நட்டம் பயில்வதால்தான் பற்றிலாத பெரியோரும் பல காமுறும் ஏனையோரும் மற்று எல்லாமும் இயங்குகின்றன என்பர் அறிந்தோர். மன்றுளாடும் மாமணியாம் மாலறியாத மா தேவனைக் கண்டு மனமுருகிய அப்பர் பெருமான் "மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே!" என்றார். கண்டார் மனங்கவரும் கவினார் தோற்றம் தில்லைபம்பலவரின் திரு திருநடனத் தோற்றம். அத்தகைய அழகார் திருவுருவத்தினை நம் மனக்கண்முன்னர் நிறுத்தி இப்புலவர் பெருமான் பின்வருமாறு கூறுகின்றார்.

பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாமநீர் வரைப்பி னுனில வளாகமும்

ஏனைய புவனமு மெண்ணிங் குயிருந்
தானே வகுத்ததுன் றமருகக் கரமே!
தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
அனைத்தையுங் காப்பதுன் அமைத்தகைத்தலமே!
தோற்றுபு நின்றவத் தொல்லுல கடங்கலும்
மாற்றுவ தாரழ லமைத்ததோர் கரமே!
ஈட்டிய வினைப்பய னெவற்றையு மறைத்துநின்
றூட்டுவ தாகுநின் றூன்றிய பதமே!
அடுத்தவ இன் னுயிர்கட் களவில்பே ரின்பங்
கொடுப்பது முதல்வநின் குஞ்சித பதமே!"

விண்ணுலகும் விரிநீர் மண்ணுலகும் ஏனைய புவனங்களும் எண்ணற்ற உயிர்த்தொகுதியும் எல்லாம் ஆடும்பெருமானின் உடுக்கை யுடைய கையினின்றே தோன்றின. படைத்தவை யனைத்தையும் காப்பது ஆடல்வல்லபெருமானின் அபயகரமாகும் உலகங்களையும் அவைகளினுட்பொருளையும் முடிவில் அழிப்பது சிற்றம்பலவனின் தீயேந்திய திருக்கரமே. உயிர்கள் ஈட்டிய வினைப்பயன் அனைத்தையும் மறைத்து நின்று ஊட்டுவது நடராசப் பெருமானின் ஊன்றிய திருப்பாதமே. உயிர்களுக்கெல்லாம் அளவற்ற பேரின்பமாம் அருளைப்பொழிவது கூத்தப்பெருமானின் தூக்கிய திருவடியே. புலவர் பெருமானின் இக்கருத்து "தோற்றம் துடியதனில் ………" என்ற பாடல் கருத்துடன் வைத்து ஒப்பு நோக்க இன்னும் இன்பம் தரும்.

நூல்கள் யாவும் நொடித்தான் மலை உத்தமன் சொல்லிய திருவாக்குகளே! நூல்கள் சொல்லும் அறங்கள் பல. அவைகளில் சிறந்தன இரண்டே. அவைதாம் இல்லறம், துறவறம் என்பன. இல்லறமென்பது ஆணும் பெண்ணும் அன்பொடு புணர்ந்து அருளின்று சுற்றம் தழுவி விருந்து புறந்தந்து வாழும் நெறியாகும். துறவறமென்பதோ, மனையறந்தனை நிறைவுர நடத்திப் பின்னர் பற்று நீக்கி வாய்மையும் தவமும் தழுவிக்கொண்டு, மெய்வருத்தி வாழும் பேறேயாம் இவ்வாறு இருபெரும் அறங்களின் இயல்பினைச் சுட்டுகின்றார் இப்புலவர். இங்குத் துறவறம்என்பது இல்லறத்தினைத் துறத்தலன்று. இல்லறமெல்லாம் நல்லறமாகப் பயின்று, பின்னர் பற்று நீக்கி வாழ்வதே! என்று சுட்டுவது நினையுந்தோறும் மகிழ்தற்குரிதாகும்.

இப்படியெல்லாம் அறவழி நிற்றலின் பயன்யாது? முத்தியன்றே எவ்வாறு முத்தி கிடைக்கும்? திருவாரூரில் பிறந்தால் முத்தி. ஆனால் அனைவருமே ஆரூரில் பிறப்பது என்பது இயலாத ஒன்றல்லவா? இனி, காசியில் சென்று இறந்தால் எல்லோர்க்கும் முத்தி கிடைக்கும் என்பர் பெரியோர்; ஆனால் காசி நகர் செல்வது என்பது எளிதா? வழியருமை கிடக்கட்டும்: அறவழி நின்று பொருளைக் கொண்டு, பிறன்பொருள் விழையாப் பேரறம் பூண்டு, பசிப்பிணி தாங்கி, நோய்ப்பிணி ஏற்று, இடைச்சுரத்து இறவாது காசிநன்னகருழைச் சென்று உயிர் விடுவது என்பது எல்லோர்க்கும் கிடைக்கின்ற பேறு? அரிது என்கிறார் புலவர்.

விதிப்படி நடந்து இல்லறம் காண்பது உலகில் பலரால் இயலாது. துறவற நெறியாலும் அவ்வாறே, பின், இவர்கள் எப்படித்தான் இறையருளைப் பெறுவது?

சிற்றுயிர்க்கிரங்கும் அற்புதக் கூத்தனும் தில்லைப்பெருமான் பால் வந்து அவன் திருநடம் கும்பிடப் பெற்றால் ஒன்றுக்கும் பற்று என் போன்ற எளியோமெல்லாம் நற்கதியடைவோமன்றோ! யான் அறமறியாதவனாயினும் "நீ அன்பில்லாதவன்! கொடியவன்! என்று இறைவா! நீ இகழமாட்டாய். அருள் தருவாய். நிமலா இஃதுன் இயல்பன்றோ!" என்கிறார் புலவர். சான்ற உவமையொன்றின் மூலம், கடவுளின் திருவருள் அவரவர் அன்பின் திறத்திற்கேற்பவே கிடைக்கும் என்கிறார். இதோ அவர் கூற்று.

"மருந்துண் வேட்கையன் மனமகிழ்ந் துண்ணினும்
மருந்துழி யொருவ னருவருப் புறீஇத்
தன்முகஞ் சுழித்துத் தலைநடுக் குற்றுக்
கண்ணீர் வீழ்த்துக் கலுழ்ந்தனன் மாந்தினும்
வாய்ப்புகு மாயினம் மருந்திரு வருக்குந்
தீப்பிணி மாற்றுதல் திண்ணமே யன்றி
நொதுமலும் பகையும் போக்கி யொருபொருள்
விழுத்தகு கேண்மையோர்க் குதவல்
வழக்குமன் றைய மன்றுடை யோர்க்கே!"

நேரியாளர் இருவர் இருவருக்கும் நோய் ஒன்றே. மருத்துவர் மருந்து தருகிறார். ஒருவன் பருகுவன்ன ஆர்வத்துடன் அதனை உண்ணுகின்றான் மற்றவனோ மனம் நடுங்கி முகம் சுளிக்கின்றான். மருந்தென்ற நினைவே அவன் மனதில் இடர்செய்கிறது. தலை நடுங்க

மனம்தளரக் கண்ணீர் ததும்ப, வெறுப்புடன் அவன் மருந்துண்ணு கின்றான். ஆனால் இருவருமே நோயினின்றும் விடுபடுகின்றனர். நோயாளர் மருந்தினை விருப்பு வெறுப்புடன் காணினும் மருந்துக்கு அவர்கள் மீது காழ்ப்பன்று காதலே. இருவரையும் குணமாக்குகிறது. இது மருந்தின் இயல்பாம். இதுபோல் மூவா மருந்தாகிய இறைவன் பிறவிப் பிணியாளராம் நம்மை இனிதாக்குகின்றான். "இனியன்! இறைவன்! எம்மான்" என்று ஏத்திப் போற்றுகின்றனர் சிலர். மெய்யாகவே சிந்தையுருகிப் போற்றுகின்றனர். பலர் இவ்வாறில்லை. "கடவுள் என்னைக்காப்பாற்றுவாரோ? மாட்டாரோ? அல்லது கைவிடுவாரோ? எப்போது அவர் அருள் கிட்டும்? இப்போதே கிட்டுமா? இன்னும் நாளாகுமா? என்றெல்லாம் ஐயுற்று ஆண்டவனை வணங்குவோர் உலகில் பலர்.

ஆனால் இறைவன் பேரருளாளன் அருட்கடல். இவ்விருவருக்கும் அவன் திருவருள் ஒன்றாகவே கிடைக்கிறது. வேறுபாடில்லை. ஏன்? தன்னையடைந்தார்க்கு இன்பம் தருபவனல்லவா அவன்? அவனை நினைத்தால் போதும் அவனருள் கிட்டும் என்கிறார் புலவர் பகை நட்பின்றி யாவருக்கும் பொதுவில் நடத்தல் "மன்றுளார்" இயல்பல்லவா? என்கின்றார். "மன்றுளார்" என்ற சொல்லில் உள்ள சிலேடை நயம் நினைந்து மகிழத்தக்கது. தில்லை மன்றுள் நடிக்கும் நாயகனையும், மாறுபாடியில்லாமல் எவர்க்கும் முறை செய்யும் நீதிமன்றுளாரையும் குறிக்கும் அச்சொல்லின்பம் சுவைத்து மகிழத்தக்கதாகும். இடைமருதூர் மும்மணிக்கோவையில் "வல்லான் ஒருவன்........." என்று பட்டினத்தார் பாடுவது ஈண்டு ஒப்ப வைத்து எண்ணத்தக்கது.

இத்தகைய இனிய பாடலை இயற்றிய புலவர் யாரென்று அறிய ஆவல் தோன்றுகிறதல்லவா அவர் வேறு யாருமல்லர். அகிலம் போற்றும் மாமுனிவர் கந்தனருள் பெற்ற கவிஞர், அம்மையினருள் பெற்ற ஆன்றவிந்த சான்றோர் நீதிநெறியுரைத்த பெரியார் குமரி முதல் கங்கை வரை சென்று வென்ற தமிழ்ப் பாவலர் சிற்றிலக்கிய வேந்தர் ஸ்ரீ குமரகுருபரரே யாவார். இத்துணையபுதிய கருத்துக்களின் கோவையாக விளங்கும் இந்த எழில் மிக்க பாடல் ஸ்ரீ குமரகுருபரர் இயற்றிய சிதம்பரம் மும்மணிக் கோவையில் வருகின்ற முதல் பாடலாகும். நேரிசை ஆசிரியப் பாவில் அமைந்த இந்த நீண்ட பாடலில்தான் ஸ்ரீ குமரகுருபரர் எத்துணை நுட்பமுடன் இக்கருத்துகளைக் கூறுகின்றார் இஃது ஒரு பாடல் மட்டுமா? அல்லவே! பன்னூறு பாடல்கள்! பா நயம் கொப்பளிக்கும் கவிதைகள். ஸ்ரீ குமரகுருபரரின் கவிதைக் கடலில் இது ஒரு முத்து. ஒப்பற்ற நன்முத்து.

ஸ்ரீ குமரகுருபரர் பிரபந்தங்களில் மதுரைக் கலம்பகம்

(தொடர்ச்சி)

ப. முத்து. பி. ஏ.

பொருண் முற்றி மீளும் தலைமகன் மேகத்தைப் பார்த்து உம்மைக் கண்டால் தலைவி இன்னும் நான் வரவில்லை யென்று கருதி கண்ணீர் விடுவாள். ஆதலின் நீர் மதுரைக்குச் செல்லற்க. அன்றியும் நீர் முன்னரே தளைப்பட்ட ஊராயிற்றே என்று மதுரைத் தலச்செய்தியையும் இணைத்துக் கூறுகின்றான்.

"கேளார் புரஞ்செற்ற வின்னுரி தோயக்கி ளர்ந்துற்ற தோர்
தோளாளர் கூடற் பதிக்கேகு முகில்காள் சொலக்கேண்மினோ
வாளாவொர் மின்னுங்கண் மழைசிந்த என்சொல் மறுத்து ஏகன்மின்
தாளாண்மை யன்றே தளைப்பட்டவூரிற் தனித்து ஏகலே"

என்று என்னை விடுத்துத்தனித்து ஏகாதீர் என்கின்றான் இதனை

"முடிவளை யுடைத்தோன் முதல்வன் சென்னியென்று
இடியுடைப் பெருமழை யெய்தா தேகப்
பிழையா விளையுட் பெருவளஞ் சுரப்ப
மழைபிணித் தாண்ட மன்னவன் வாழ்கெனத்
தீதுதீர் சிறப்பின் தென்னனை வாழ்த்தி"

என வருகின்ற சிலப்பதிகார வரிகளும் மதுரை மன்னவன் உக்கிர குமார பாண்டியன் மேகங்களைச் சிறைபடுத்தித் தன் நாட்டில் பிழையாத விளையுளைப் பெருகச் செய்தான் என்ற தலவரலாற்றை யும் ஆசிரியர் இதன்கண் தெளிவுற விளக்குகின்றார்.

சோமசுந்தரக் கடவுளிடம் தன் துன்பத்தை முறையிட்டுக் கொள்ளும் தலைவி, ',மதியும் தென்றலும் மன்மதனும் என்னைத் துன்புறுத்த தேவரீர் செங்கோல் செலுத்திப் பயன் என்ன? என வினவுகின்றாள்.'

"ஈர மதிக்கு மிளந்தேன் றலுக்கும் இன் றெய்யுமதன்
கோர மதிக்குங் கொடுங் கோலுள கொடுங்கோன்மை முற்றும்
தீர மதித்துஞ்செங் கோன்மையென் ஞஞ்சில தேவர்மதி
சோர மதிக்குங் கடற்றீ விடம்கொண்ட சொக்கருக்கே"

என்று முன்பு எம்பெருமான் சுந்தரபாண்டியராக வந்து தடாதகைப் பிராட்டியாரை மணந்து அரசு செலுத்திய செய்தியை நினைந்துக் கூறியது இது.

தலைவியின் நிலையைக் கூறி இரங்கும் செவிலி, மன்மதனது கரும்பை இவள் வேம்பென்கிறாள். தேவரீர் திருத்தோளில் அணிந்த வேம்பைக் கரும்பென்கிறாள் இவள். இவ்வாறு மாறியாடுகிறாள், மாறியாடிய தேவரீரைத் தரிசித்தாருக்கும் மாறியாடும் வல்லபம் வருமோ" என்று இயம்புகிறாள். இதன்கண் கால்மாறியாடிய திருவிளையாடல் குறிக்கப் பெற்றது.

உலவாக்கோட்டையளித்த திருவிளையாடலை நினைத்த தலைவி

"அடுத்தங்குலவாக் கோட்டை சுமந்
தளித்தீ ரொருவற் கதுநிற்கத்
தொடுக்கும் கணைவே டனக்குலவாத்
தூணி கொடுத்தீர் போலுமால்"

இவ்வாறு கூறுவதாக அமைந்துள்ளது உலவாக்கோட்டை என்பது எடுக்க எடுக்கக் குறையாத நெற்கோட்டையை அடியார்க்கு நல்லார் என்னும் வேளாளருக்கு அருளிய திருவிளையாடற் செய்தி இது.

இறைவன் விறகு சுமந்த திருவிளையாடல் நிகழ்ச்சியினையும் யானை எய்த திருவிளையாடலையும் இன்னும் பிற திருவிளையாடல் நிகழ்ச்சிகளையும் நூலெங்கும் அகத்துறையுடன் இணைத்து கவிநயத்துடன் குமரகுருபரர் தந்துள்ளார் அவற்றில் ஒரு சிலவே கண்டோம்.

இறைச் சிறப்பும் புறப்பொருளும்

பொதுவாக அகப்பொருள் கருத்துக்களைப் போன்று புறப்பொருள் அடிப்படையில் 18 பாடல்கள் காணப்படுகின்றன. இறை பெருமையும் புகழும் இவற்றில் உணர்த்தப்படுகிறது இதிலும் திருவிளையாடல் நிகழ்ச்சிகளும் கூறப்படுகின்றன.

புறத்திணையில் மறம் என்னும் உறுப்புப் பேசப்படுகிறது மறம் என்பதுமறவர் தம்மகளை மணம்பேசவந்த மன்னன் தூதனை நோக்கி மன்னவனை இகழ்ந்து பேசி மணம் மறுப்பதாகச் செய்யுள் அமை யும் இது காஞ்சித் திணையில் கூறும்,

"ஏந்திழையாள் தருகென்னும்
வேந்தனொடு வேறு நின்றன்று"

என்ற மகட்பாற் காஞ்சி என்னும் துறையே.
இம்மறமே பிற்காலத்தில் கலம்பக உறுப்பாக இடம்பெற்றது எனலாம்.

சவுந்தரபாண்டியனைச் சேர்ந்த மறவர்கள் தம் வீரப்பெருமை யைத் தம்மிடம் பெண்கேட்டு வந்த தூதுவனிடம் கூறித் தூதனுப்பி மன்னவன் யார் என வினவி ஓலை எழுத்து இவ்வாறு இருப்பின் விடுத்த மன்னரின் தலையெழுத்தும் அவ்வாறே இருக்கும் என இகழ்ந்து கூறி அவனைக் கொண்டு வருக என்று தம் வீரரிடம் கூறுவதாக இப்பாடல் விளங்குகின்றது,

"தருமுகத்து நிமிர்குடுமி மடமலிகூடற்
சவுந்தரபாண் டியர்குடியாஞ் அமரினிடை யாற்றுள்
ஒரு முகத்தி லொருகோடி மன்னர்மடிந் தொழிந்தார்
உனைவிடுத்த மன்னவன் யாருரைத்திடுவாய் தூதா!
மருமுகத்த நெறிக்குழல்எம் மறக்கொடியைக் கேட்பான்
மணம்பேசி வரவிடுத்த வார்த்தையது சொன்னப்
திருமுகத்தி லெழுத்திதுவேல் திருமுடியில் எழுத்தும்
தேர்ந்றியக் கொண்டுவா சிகையினொடுஞ் சென்றே"

சிவபெருமானும் உமையம்மையும் முருகப்பெருமானும் முறை யே சுந்தர பாண்டியனாகவும் தடாதகைப்பிராட்டியாகவும் உக்கிர குமாரனாகவும் மதுரைக்கு வந்தமை தண்டமிழ் மதுரங்கூட்டுண எழுந்த வேட்கையால்தான் என்று தமிழ்ப் பெருமையும் புறப் பொருளில் காட்டப்படுகிறது.

"தமரநீர்ப்புவன முழுதொருங்கு ஈன்றாள்
தடாதகை தேவியென் றொருபேர்
தரிக்கவந் ததுவும், தனிமுத லொருநீ
சவுந்தர மாறனை தவும்

குமரவேள் வழுதி யுக்கிர னெனப்பேர்
கொண்டதுந் தண்டமிழ் மதுரம்''

என்று மூவரும் அரசு வீற்றிருந்தமைமைக் குறிக்கிறது.

திருமாலும் பிரமனும் காண்பதற்கு அரிய அடியும் திருமுடியும் உடைய தலைவரான மதுரேசராகிய சொக்கநாதப் பெருமான் வெற்றிக்குரிய சின்னங்களை அணிந்து 'சித்தன்' என்பவனுடைய உடலை வெட்டி வெற்றி கொண்டனர் என்றாள் ஒருத்தி. மற்றவள் வெற்றிக்குரிய சின்னங்களை அணிந்து சித்தனது உடலை வெட்டி வெற்றி கொண்டது உண்மையாயின் ஒன்றே உடம்பு அங்கு இரண்டே இடும்பங்கு என்றபடி அவர்தம் அருமையான ஓர் உடம்பு இருதுண்டம் (இறைவர் கூறும் அம்பிகையின் கூறும் ஆவதற்குக்கா ; ாம் என்ன? என மூன்றுமவள் இருகூறு ஆயினும் நம் தலைவற்குத் திருமேனி இல்லை எனக் கூறினள் தோற்றவருக் கன்றி வென்றவர்க்கு உடல் இரு கூறுதற்குக் காரணமில்லையா தலின்;

"இருவருக்கும் காண்பரிய ஈசர்மது ரேசனுர்
விருதுகட்டி அங்கம் வெட்டி வென்றனர்காண் அம்மானை
விருதுகட்டி அங்கம் வெட்டி வென்றனரே யாமாகில்
அருமையுடம் பொன்றிரு கூருவதேன் அம்மானை
ஆனாலுங் காயமிலை யையரவர்க் கம்மானை''

என்று அம்மானை விளையாடும் பெண்களின் மூலமாக இறைவனது பெருமையை எடுத்தியம்புகிறார் இது போன்ற பல புறப்பொருள் கருத்துக்களும் நூலெங்கும் விரவியுள்ளன.

முடிவுரை;-

தவத்திரு குமரகுருபர சுவாமிகள் அருளிய மதுரைக்கலம்பகத் தில் இடம்பெறும் பாடல்கள் ஒவ்வொன்றிலும் ஏதேனும் ஒரு வகையில் பாட்டுடைத் தலைவராகிய எல்லாம் வல்ல இறைவனைத் தொடர்பு படுத்தி அமைக்கப் பட்டிருப்பது குறிப்பிடதக்க ஒன்று கும் இதில் அகத்திணையும் புறத்திணையும் நிறைய இடம் பெற்றுள் ளன மேலும் மதுரையில் இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்க ளும் மதுரையின் தலபுராணக் கருத்துக்களும் நூலெங்கும் காணப் படுகின்றன. இவையனைத்தும் கலம்பக உறுப்புகளுடன் இணைந்து கவிநயம் சிறக்கச் செய்துள்ளன. இவ்வியல்பு அடிகளின் பிற கலம்பகங்களுக்கும் பொருந்தும்.

ஆலயபூஜைப் படிக்காசு நிதி

நன்கொடை அளித்த அன்பர்கள் விபரம்

திரு/திருமதி	முன் இருப்பு	ரூ 27219—00
உக்கரை கைலாசம்		5—00
வெள்ளகோவில் R. C. சாமிநாதன் செட்டியார்		5—00
	ஆக	ரூ 27229—00
தலச்சங்காடு ஸ்ரீ சங்காரண்யேஸ்வரர் ஆலயச் செலவு		ரூ 90—00
பாணுறை ஸ்ரீ பாணபுரீஸ்வரர் ஆலயச் செலவு		75—00
திருந்து தேவன்குடி கற்கடேஸ்வரர் ஆலயச் செலவு		90—00
சேங்கனூர் ஸ்ரீ சத்தியகிரீஸ்வரர் ஆலயச் செலவு		69—20
,, சந்தனகாப்புச் செலவு		25—00
திருவலம்புரம் வலம்புரிதாதர் ஆலயச் செலவு		90...00
	ஆக	ரூ 439—20

Phone No : 222 "Tel Add. "JEWELLERY"
PT.N. G. S. T. No: 209126. Post Box. No. 14
I.No. 8/77. Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு

ஸ்ரீநடராஜ விலாஸ்
ஜுவல்லரி ஹால்
சிதம்பரம்

முகவரி

ச. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்

உரிமையாளர்கள் :

நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்
26, 27, 28, கடைத்தெரு, சிதம்பரம்
தென்னார்க்காடு மாவட்டம்—608 001

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

(மாதப் பத்திரிகை)

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச்சாந்தியைத் தரும் அருமருந்தாக இந்தப் பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிகமறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

உள்ளத்தைப் பண்படுத்தும் இந்து மதத்தின் சிறந்த கருத்துக்கள் உங்கள் குடும்பத்தினருக்கு எப்போதும் கிடைக்கச் செய்ய ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை ஆயுள் சந்தாதாரராகச் சேருங்கள்.

சந்தா விவரம்

வருடச் சந்தா	ரூ. 22
ஆயுள் சந்தா	ரூ. 250
தனிப் பிரதி	ரூ. 2

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்		தொலைபேசி
	ஸ்ரீராமகிருஷ்ண மடம்	71959
மயிலாப்பூர் :	சென்னை 600 004.	71231

நூல் நிறை

1. இக்காலத் தமிழியல்

[ஆசிரியர்: டாக்டர் சொ. சிங்காரவேலன். எம். ஏ., பி. எச். டி. பக்கங்கள்: 12+72; விலை ரூ 8. வெளியீடும் கிடைக்குமிடமும்: ஞானவேல் பதிப்பகம், 2, மயூரநாதர் சந்நிதித்தெரு, மயிலாடுதுறை 609001]

இது சிறுகதை புதினம் முதலிய தமிழ்ப்படைப்பிலக்கியம் ஆய்வு பற்றிய ஓர் அறிமுக இலக்கண நூல். சிறுகதையியல் புதின இயல், இதழியல், நாடகவியல், பட்டிமன்றவியல், வழக்காடு மன்றஇயல் புதுக்கவிதையியல், காப்பிய இயல், ஆய்வு இயல், என்னும் ஒன்பது தலைப்புக்களில் இலக்கணங்கள் வகுக்கப் பெற்றுள்ளன. புதிய முயற்சி எடுத்துக் கொண்ட செஞ்சொற் கொண்டல் போற்றற்குரியவராவார். கவிதைப் பட்டிமண்டபம், சித்தனை மேடை, கருத்தரங்கு முதலியன பற்றியும் தொடர்ந்து இலக்கணம் வகுப்பார் எனக் கருதலாம். இக்காலத் தமிழியல் என்பதால் தன்மையில் படைத்தனன் (பக் 2) வகுத்தனன் (பக் 3) என்பன போல அமைத்தலையும் உளங்கொள்ள வேண்டும்.

ஆங்கில அறிஞர்கள் வகுத்த இலக்கண நெறிகளைச் சுவை குன்றாச் சூத்திரங்களாக்கியமை மகிழ்தற்குரியது. இருநூற்று நாற்பது சூத்திரங்கட்கும் விருத்தியுரை தேவையேய செறிந்த கருத்துக்களால் அவை விம்மிதத்துடன் காட்சி தருகின்றன.

இந்நூலை வெளியிட ஆக்கமும் ஊக்கமும் நல்கிய பெங்களூர் ஸ்ரீ வெங்கடேசா கல்வி நிறுவனர், செயலர், தாளாளர் ஆகிய செந்தமிழ்ச் செல்வர், கல்விக் காவலர் பண்டித மாமணி டாக்டர் திரு. ம. வெ. ஜெயராமன் எம். ஏ., டி. லிட், அவர்களைப் பற்றிப் புதிய கல்விக்குப் பூபாளம் என ஒரு கவிதை புனைந்துள்ளார், திரு. சொ. சி. அவர்கள். இத்தகு நற்பணிகள் ஆற்ற உதவும் புரவலரை எவ்வளவு போற்றினும் தகும்.

புதுமைக்கும் பழமைக்கும் பாலமாகக் கவித்துவம் செய்யும் செஞ்சொற் கொண்டல் அவர்களின் பணிகளின் உயர்வுக்கு இந்நூலும் ஒரு சான்றாகும்.

2. துவாதசலிங்க ஸ்தோத்திரம்

[ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது. 12 பக்கங்கள், 60 காசுகள் வெளியீடும் கிடைக்குமிடமும்; ஸ்ரீ காமகோடி ஆய்வு மையம் ஆஸ்ரமம் 46 A கல்யாணராமன் தெரு, கும்பகோணம் 612001]

பாரதத்திலுள்ள பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களையும் தோத்தரிக்கும் பன்னிரண்டு பாடல்கள் கொண்டது இந்நூல். 1 சோமநாதர் (சோமநாதபுரம்) 2 மல்லிகார்ச்சுனர் (மல்லிகார்ச்சுனம்) 3 மகாகாலேசர் (உஜ்ஜயினி) 4 ஓங்காரேசன் (மர்நக்) 5 வைத்தியநாதர் (வைத்யநாத்) 6 நாகநாதர் (சாண்டி) 7 விஸ்வநாதர் (காசி) 8 பீமசங்கரர் (பீமசங்கரம்) 9 இராமேச்சுரர் (இராமேச்சுரம்) 10 திரியம்பகேஸ்வரர் (நாசிக்) 11 கேதாரீஸ்வரர் (கேதார்நாத்) 12 திஷணேசர் (எல்லோரா) இப்பன்னிரண்டு சிவலிங்கங்களையும் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி வழிபட்டதன் நினைவாக இந்நூல் வெளியிடப் பெற்றுள்ளது.

அளவற்ற செல்வமும் நல்லபுகழும் நலனும் பெறுதற்கு இப்பன்னிரண்டு பாடல்களையும் பாராயணம் செய்ய வேண்டும். பாரயணத்திற்கு ஏற்ற வகையில் தமிழ் எழுத்துக்களில் பொழிப்புரையுடன் இந்நூல் நன்கு அச்சிடப் பெற்றுள்ளது. வரைபடத்தில் இத்தலங்கள் இருக்கும் இடங்கள் குறிப்பிட்டிருப்பது ஒரு சிறப்பு அம்சமாகும்.

ம. வே. பசுபதி

இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்

25

சர்க்கரை வியாதியால் வருந்துகிறவர்களுக்குச் சிகிச்சை

முருங்கைக் கீரையைத் தொடர்ந்து சமைத்து உண்ண வேண்டும் வெறும் வயிற்றில் சிறிது வேப்பிலையும் துளசியையும் சாப்பிட வேண்டும். மாதுளம்பழம் சாப்பிடலாம் இதை இதைத் தொடர்ந்து நாவல் கொட்டைக் கஷாயம் செய்து சாப்பிட்டுவர சர்க்கரை வியாதிமறையும்.

நீர்க் கோர்வைக்குச் சிகிச்சை

எலுமிச்சம்பழத்தை குறைவான நெருப்புள்ள அடுப்பில் ஒரு பழத்தின் தோலை உரித்து விட்டுச் சாறு கசியும் வரை வதக்கி பின் அதன் சாற்றை வேளைக்கு ஒரு மேசை கரண்டி அளவாக 3 மணிக்கு ஒருமுறை உட்கொள்ள நீர்க் கோர்வை குணமாகும். குழந்தைக்குக் கொடுக்கும் போது சிறிதளவு தேனை உடன் கூட்டிக் கொடுக்கவும்

Dr. N. சடையப்பன் S. M. P.

ஞானமிர்தம்

தொடர்ச்சி

அச்சத்திதான் எதுபோலக் கலக்குமென்னில் சந்திராதித்தர் கூடிய ஞான்று சமுத்திரமானது பயங்கரமாக எழுகின்ற அலைகளினலே மிகவும் உயர்ந்து ஆரவாரிக்கின்ற ஆரவாரம் ஆகாசத்தின் மேற்கலந்து அதன் இடம்முழுதும் மறைத்தாற்போலச் சத்திக்கின்ற தன்மையாயிருக்கும்.

மோகமில்லாதவனகிய பரமசிவனுடைய முடிவில்லாத சத்தியாகிய ஏக சத்தியே கிரியாபேதத்தாலே திரிவிதமாக நின்று இயற்றும் இயல்பு எவ்வண்ணம் என்னில் வெற்றியை யுடையனகிய ஆதித்தனுடைய விரிந்தகிரணம் மெழுகை நெகிழ்க்கவும் ஈரமண்ணின் நீரை வாங்கவும் ஏக சத்தியாகி இராகத்துவேடமற்றிருக்கவும் இவை உடையனகத் தோன்றினற் போல விரிந்த பிரகாசத்தையுடைய பரமசிவனுடைய ஏக சத்தியாகிய இச்சாசத்தியே பலபோலத் தோன்றுவது இவ்வண்ணமாய் இருக்கும். அந்தப் பரமசிவனுக்குக் கிரியாசத்தியாய்ப் பொருந்திய பெரிய கீர்த்தியையுடைய மகாசத்தி இருக்கும்படி சொல்லின் அறிவின்றி இருந்தும் அறிவுடைய பதார்த்தத்தைப் போன்று பரமசிவனைப் பிரிதலை யின்றியே மிக்கதொழில் இல்லாததாகி அதுதான் அரிய தொழில்களைச் செய்யும் இயல்பு ஆரிய வேதாகமங்களிலும் உலக நூல்களிலும் அவ்வவ் விடங்களிலே சொல்லப்பட்டுவரும். இதனை நீ அறிவாயாக.

அஃது என்போலவென்னில் சிந்தாமணியும் கற்பகமும் என்று சொல்லப்பட்ட இவை அசேதனமாயிருந்தும் வேண்டினேர் வேண்டிய பொருளை அவ்விடத் தவ்விடத்து உதவினற் போலவாம். அத்தன்மைத்தாகிய பரமசிவனுடைய ஆன்மாக்களின் துக்கத்தைக் கெடுக்கும் சொல்லுதற்கரிய அளவில்லாத மகத்தான ஞானசத்திதான் விளங்குகிற பெரிய கிரியாசத்தியினலே நன்மையைத் தருகிற போகம் மோக்கம் என்னும் அபேட்சிதமான பொருள்களை மிகவும் அறிவித்து அளித்து நிற்குங்காண் எ- று.

மற்று, வினைமாற்று. ஓ, இசைநிறை, மன், மிகுதி.

நு. வி: அவிகாரி - விகாரமற்றவன். ஆதபம் - கதிரவன் ஒளி. மகத்தான பிரகாசம் - பேரொளி, சர்வவியாபியாய் - யாண்டும் நீக்கமற நிறைந்ததாய். இராகத்துவேஷம் - விருப்பு வெறுப்பு. சர்வதோமுகமாய் - எங்ஙனும் நிறைந்த ஒளிமுகமாகி

சந்திராதித்தர் - சந்திரசூரியர்கள். திரிவிதமாக நின்று - இலய' போக, அதிகாரங்களாக நின்று. அசேதனமாய் இருந்தும் - அறி வற்றனவாய் இருந்தும். அபேட்சிதமான பொருள் - விரும்பத் தக்கதாய பொருள்.

சருவகாரண சிவன் அவிகாரி

64 நாரம் மேய நல்லுயிர் அனைத்தும்
நாரம் அன்றே நாரம்இன்று இன்றே
நாரச் செய்தியும் அன்றே நாரம்
ஆருயிர்க்கு கல்லது உயிர்அதற் குதவும்
பேருப காரமும் இன்றே ஆயினும்
ஆருயிர்க்கு அபயம் அறன்மற் றுள்ளாது
ஆருயிர்க்கு அபயம் ஆற்றும் பேரிசை
வான்மண் தீநீர் வளியகம் நிறைதந்து
ஆறது அப்புறம் படர்ந்துந் தான்அவை
உறைவிடன் ஊங்குஇனிது அளித்தும் இடையும்
தானே யாகி ஏனைய விளக்கி
இருவேறு இசையாது ஒருவழிச் சிவணி
இன்றி யமையாச் சிறப்பிற் றாகி
என்றும் தான்அவை ஒன்று வாரும்
பதங்கன் பல்கதிர் பரப்பி விசும்பினிது
இயங்கும் காலை எழுந்தினி தியற்றும்
மன்னுயிர்த் தொடக்குஅம் மார்த்தாண் டற்குஇன்று
அன்னோ தானும் அருவிலை அமளிப்
பாயல் நீங்கிப் பல்தொழில் புரிகென்று
ஏவுதிறம் படரா னேனும் மேவிய
ஆதபன் இடத்துஅன்று அருந்தொழில் புரியும்
நீதம் இல்லை நீள்நிலத் தோர்க்கே
இன்னும் கேண்மதி இனமலர் துதைந்த
தாதுபடு கொழுநிழல் பாதவம் அன்றே

மாதர் வண்டொடு சுரும்பிமிர் தருநிழல்
பாதவம் படைத்ததும் அன்றே பாதவம்
இன்றேல் நீழல் காண்டலும் இலமே
ஒன்ருே மற்றும் உண்டுமற் பெரிதே
கருந்தாது கொட்கும் இருஞ்சிலை இரும்பை
வருந்தின மறுகுமன் என்னது ஐயமின்று
இருந்தாது கறங்கற் கிதனிடத் தல்லதை
பொருந்நா தென்ன விரிந்தொளி கான்று
மாதிரம் அனைத்தும் ஈரேழ் புடவியும்
அளவுஇழைத் தளவா அண்டமும் பலவெனக்
கொட்புறு காலமும் எப்பே ருயிரும்
உருவரை யெய்தி ஒன்ருெடும் புணராது
இனைய காக்குங் கனைக ணைகிக்
கனைகண் யான்எனும் விளைவற ஓரீஇப்
பன்னிய எவற்றுந் தன்னமோர் குறையின்று
அன்னேன் நின்ற அகாரணற் காரணம்
என்னதென்று இசைக்குவம் யாமே அன்னே
உரையுணர்வு ஒடுங்கினர் உணர்வின்
விரையுறு கடியின் விரவி யோனே.

இது பர சிவன், செயல்களனைத்திற்கும் காரணமாகித் தான் அவிகாரியாயிருப்பன் என்று கூறியது.

இ - ள் சலத்தில் வர்த்திக்கும் பல வருக்கத்து நல்ல பிராணிகளும் சலம் அல்ல. சலத்தை இன்றி அமையா. அவை சலத்தின் காரியமும் அல்ல. சலந்தான் நிறைந்த பிராணிகளுக்கு இரட்சையாமல்லது பிராணிகள் தாம் அந்தச் சலத்துக்குச் செய்யும் பெரிய உபகாரமும் இல்லை அற்ருயினும் நிறைந்த பிராணிகளை இரட்சிக்கின்றதான தருமத்தைச் செய்யாநின்றேன் நான் என்று இச்சலந்தான் நினையாதிருந்தும் இந்த நிறைந்த பிராணிகளுக்கு இரட்சையைச் செய்யா நிற்கும். பெரிய கீர்த்தியையுடைய ஆகாயமானது பிருதுவி அப்பு தேயு வாயுவாகிய நான்கிலும் வியாபித்தும் அமையாது அப்பாலும் வியாபித்தலை

யுடைத்தாய் தான் அப்பூதங்கட்கு மிகவும் இனிதாக இருக்கத் தக்க இடம் கொடுத்தும் நடுவும் தானேயாய் அப்பூதங்களை உருத் தெரித்து அவை வேறு தான் வேறு என்னும் வேறு பாடுஅற ஒரு படித்தாகக் கூடித் தன்னை யின்றி அமையாத சிறப்பு உடைத்தாய் ஒருநாளும் தான் அவையிற்றோடு கூடி யிராதவாறு போலவுமாம். இஃது இன்றியமையாமைக்குத் திட்டாந்தம் எனக் கொள்க. தன்னுடைய கிரணங்கள் பலவற்றை யும் விரித்துக்கொண்டு ஆதித்தனென்வன் ஆகாயத்திலே இனி தாக இயங்கும் பொழுது இனிதாகத் தொழில்புரியும் நிலை யற்ற உயிர்களின் தொடக்கு அந்த ஆதித்தனுக்கு இல்லை. ஐயோ ஆதித்தன் தானும் பெறுதற்கரிய விலையுடைத்தாகிய மஞ்சத்திற் கொள்ளப்படுகின்ற சயனத்தினின்றும் எழுந்திருந்து பல தொழில்களையுஞ் செய்யுங்கோள் என்று ஏவும் முறைமை யைச் செய்யாறுயினும் இச்செயலுக்குக் காரணமாகப் பொருந்திய ஆதித்தனிடத்தல்லது அரிய தொழில்களைச் செய்யும் முறைமை விரிந்த பூமியிலுள்ளார்க்கு இல்லை. இது பெத்த முத்தி இரண் டினும் பேரறிவு சிற்றறிவு இருக்கும் இலக்கணத்திற்குத் திட்டாந்தம் எனக் கொள்க. இன்னமும் கேட்பாயாக. செறிந்த தாதோடே கொத்துக் கொத்தான பூக்களையுடைய அழகிய விருக்கத்தின் நிழல் விருக்கந்தான் அன்று காதலிக்கப்பட்ட பெடையும் வண்டும் சத்திக்கும் அவ்விருக்கத்தின் நிழல் விருக்கத் தாற் படைக்கப்பட்ட தன்றாயினும் விருக்கமில்லையாயின் நிழலைக் காண்பதும் இல்லை;

இஃது அநாதியே பரமசிவனைப் போல ஆன்மா நித்திய மாய் இருந்ததாயினும் அவனையின்றி ஆன்மாஎன்று ஒரு பொருள் உளதாதற்கு இடமில்லை என்பதற்குத் திட்டாந்தமெனக் கொள்க.

இவை நான்கும் அகாரணற் காரணமாகப் பஞ்சகிருத்தியம் செய்தற்குத் திட்டாந்தம் அருளியது எனக் கொள்க. ஒன்றே யோ இன்னமும் திட்டாந்தம் பல உள்ளன காண். இருப்புத் தூளைச் சுழற்றும் பெரிய காந்தக்கல் இரும்பை வருத்திச் சுழற்ற வேண்டும் என்னும் கருத்தில்லையாயினும் ஐயமறப் பெரிய இரும்பு சுழலுதற்கு உரிய ஏது இதனிடத்தல்லது இல்லை. இதுபரமசிவன் அவிகாரியாயிருக்கச் சத்தி சந்நிதானத்திற் பிரபஞ்சம் காரியப் படுதற்குத் திட்டாந்தம் எனக் கொள்க.

இவ்வைந்து திட்டாந்தமும் போலச் சருவவியாபியாய்ச் சுயம் பிரகாசம் உடையனாகித் திக்குகள் பத்திலும் உலகம் பதினாலிலும் அளவு செய்து அளத்தற்கரிய அண்டங்களிலும் வருங்காலம் செல்காலம் நிகழ்காலம் என்று சுழன்றுவரும் காலங்களிலும்

சருவான்மாக்களும் போகம் புசித்தற்குத் தான் இன்றியமையாத முற்றூட்டாகிய பொருளாய் நின்று இவைகள் ஒன்றினும் தான் பற்றற்று இத்தன்மையவாகிய உயிர்களை இரட்சித்தற்குத் தான் இரட்சகனுமாய் இரட்சகன்யான் என்னும் அகங்காரம் அறவொழிந்து இப்படிச் சொல்லப்பட்ட பொருள் எவற்றினிடத்தும் சிறிதேயுமொரு குறைவின்றியே நான் மறையை முழுதுணர்ந்து ஐம்புலன்களைச் செற்று மோனிகளாயினர் உணர்விலே பூவிற்கந்தம் போலக்கூடி நின்றொழுகிய அத்தன்மையனா பரமசிவன் அகாரணும் காரணனாய் நின்ற இயல்பை ஐயோ நாம் என்னென்று சொல்லுவோம் எ - று.

மற்று, வினைமாற்று. ஏகாரம் தேற்றம். மன், அசை. ஐ, சாரியை. விரை, ஆகுபெயர்.

நு. வி: நாரம் - நீர். வர்த்திக்கும் - தோன்றும். இரட்சை - காப்பது: தானும் உணவாகிப் பிற உணவுப் பொருள்கள் தோன்றவும் காரணமாய் இருத்தலின் நீர் மிக இன்றியமையாதது என்பது பெறுதும். நீர் இறைவனுக்கு உவமை. பல்லுயிர்கள் உயிர்க்கு உவமை.

பகலவன் ஒளியால் பல உயிர்களும் தத்தம் தொழில் செய்து வாழுதல் போல இறை ஒளியால் உயிர்களும் மலமாசு நீங்கி அறிவு பெறுகின்றன. விருக்கம் - மரம். பஞ்சகிருத்தியம் - படைத்தல் முதலிய ஐந்தொழில்கள். அவிகாரி - யாதொரு வேறுபாடும் அற்றவன்.

அசத்தாத்துவ கருத்தர்

65 கலைநில வலன்எனில் புலன்அலன் அலன்எனின்
நலமலி புற்கலன் நிலைமலி கலையுடன்
ஒன்றல் ஒன்று தாகல் என்றும்
ஒன்றிற்கு ஒன்று வென்றனி நாயக
பன்னும் நிட்களம் அறிதற்கு உன்னில்
பசுவுக்கு அமலன் சத்தி ஒசியாது
உற்ற வுண்மை யானும் மற்றவன்
மந்திர வலியி னனும் மந்தமில்
நிட்களம் அறிதல் தொக்கதன் வலியின்

நொசிவிட விகாரம் மான வசிபடு
சகல னும் துகள்தொகு புற்கலன்
அல்லன் மாயை யவயவம் மாட்டி
எல்லிய நிமல மாய நல்ல
மந்திர கலையின் மரீஇ மைந்துமலி
திருந்துஇருந் தியானத்து இருந்தனன் பெருந்தகை
அரும்பெறல் யோகரில் பொருந்துதல் விடலென
நின்றது விந்து நிட்களம் அலமன்
மன்ற நன்றினி தாயின் சென்றுயர்
ஆகத் தன்மைய னயின் போகிலன்
இருங்கலை இவணம் பெருந்தகை திருந்தியல்
அரும்பெறல் யோகப் பெருந்துறைப் படியுநர்க்கு
இருந்தோர் இலக்கம் இன்றெனில் பொருந்தா
தாகலின் நாத விந்து வாகிய
யோக வாணர்க்கு உறுபயன் புரப்ப
நின்றனன் யாவும் ஒன்றிய அறிவன்
ஆகலின் அமலன் அற்றே போகிய
ஆருயிர்க்கு அருட்கடன் பூண்டு சீர்மிக
உயர்ந்தனன் பணிந்த வியந்தா கத்தை
நயந்தனன் நல்லகொல் அன்றே வியந்தென
இச்சை அருளோடு இறைமை நச்சி
இலய போக அதிகா ரத்து
நிலையினன் ஈசன் நிலைஇத் தொலையா
மாயை முதலிய விச்சைக்கு இறையின்
ஏய செய்தியின் ஏயத் தூய
அத்துவா அதனுக்கு அதிபன் எத்தகை
அத்தகை அனந்தன் நிறையசுத் தத்தின்
மிக்க பூபதி தலைமை வைத்தோன்
வைத்த நிருபனேடு ஒத்த வாறெனச்

செய்வன் எவையும் சிவன்வலி அவம்அற
ஐயமின்று உணர்த்த அறிந்தினிது எவையும்
தூய ஆகன் ஆகி ஆயா
ஞானம் எவையும் நலங்கொள
ஊனம தகல உறவிரிந் துயர்ந்தே.

இஃது "உரையுணர்வு ஒடுங்கினர் உணர்வின் விரையுறு கடியின்" விரவிய பரமசிவனுக்கு நிட்களமும் சகளமும் சகள நிட்களமும் பொருந்தாமை வினவ, "இவையிற்றுக்கு இவன் இன்றி யமையாது யிருப்பன்" எனக்கூறி, அசுத்தாத்துவாவுக்குக் கருத்தா அனந்த தேவரே என்று கூறியது.

இ - ள் அடியேனுக் கென்று வாய்த்த உவமையில்லாத கருத்தாவே தேகத்தோடே கூடியிரானுயின் காணப்படாதவனும். அன்றியே தேகத்தோடே கூடியிருப்பானுயின் பந்தனும், கழித்தற் கருமையால் இடையருத தேகத்துடனே கூடுதலும் கூடாமையு மாகிய ஈரியல்பும் என்றும் ஒரு பொருளுக்குப் பொருந்தா என்று சீடன் விண்ணப்பம் செய்ய புலப்படுவானல்லனென்று நீசொல்லும் நிட்களத்தை அறிதற்கு உபாயம் விசாரிக்கில் பாசபந்தனை ஆன்மாவுக்கு நிட்கள சிவசத்தி குற்றமறப் பதிதலாலே முத்த னுமையானும் மற்றும் பிரத்தியட்சத்திலே மந்திரவாதியினுடைய ஆக்கினையால் மந்திரசத்திகள் பலிக்குந்தன்மையாலும் குறுகிய விட விகாரம்கண்டு விடம் தீண்டின தன்மையை ஐயமற நிச்ச யித்தாற் போல இப்பொருள்கள் சிவன் சத்தி சந்நிதியிலே முடிந்தன என்று நித்தியமாகிய நிட்களத்தை யறிதல் கூடும்.

இனி வசீகர முடைத்தாய ஏகதேசமாகிய சரீரம் கொண்டா னுயினும் குற்றங்கள் கூடிய புற்கலன் அல்லனும் அஃது எங்ஙனம் என்னில் மாயாகாரியமான தேகத்தை யொழித்து ஒளியுடைத் தாகிய நின்மலமாகிய நல்ல மந்திர சொரூபமாகப் பொருந்தி வலிமிகுந்து திருந்தியிருக்கின்ற மகத்தாகிய தியானத்திலே பக்குவப்பட்டோர்க்குச் சொரூபமாகிய தொரு குறி வேண்டித் திருமேனி கொண்டான் பரமசிவன், என்போல என்னில்? பெறுதற்கரிய யோகிகள் சுவேச்சா விக்கிரகம் கொண்டு விட்டாற் போல. இங்ஙனம் கூற இனி நின்றதாகிய திருமேனி சகள நிட்களம் எனஅறிக. அதுதான் நிட்களமல்ல நிச்சயமாக இனிதாக மிகவும் ஆராயுமிடத்து விரிந்துயர்ந்திருக்கின்ற சகளத் திருமேனி கொண்டானபடியைச் சொல்லின் இவ்வண்ணம் பெரிய கலை முதலாகிய தத்துவாங்கிசங்களாலேயாகிய சரீரம்

எடுத்தானல்லன் பெருந்தகைமையை யுடையோனை பரமசிவன். திருந்தியிருகின்ற இயல்பையுடைய பெறுதற்கரிய யோகமாகிய பெரிய சமுத்திரத்திலே ஆடுவோர்க்கு உண்டாயதோர் இலக்காகிய சகள நிட்கள வடிவில்லையாயின் நிருவகிக்க வொண்ணுதானபடியால் விந்து நாத தரிசனம் பெறும் சிவயோகிகளுக்கு மிக்கபலன் கொடுப்பான், காரணமாகச் சகளீகரித்தான்.

இனி இவன் நிட்களமான படியைச் சொல்லின், சருவ பதார்த்தங்களிலும் ஒருபடித்தான அறிவுடையோனுதலால் நிட்களனும் அஃது ஒன்றே அளவற நிறைந்த ஆன்மாக்களுக்கு அருளென்னும் முறைமையைப் பூண்டு எல்லையில்லாத கீர்த்தி மிக உயர்ந்தோன் தன்பெருமைக்கு ஆச்சரியமாகத் தாழ்ந்த தேகத்தை நல்ல அதிசயமாக விரும்பானல்லவோ? இங்ஙனம் ஆதலாலே இச்சையான் ஆன்மாக்களைப் போகம் பொசிப்பிப்பான் காரணமாகச் சகள நிட்களமான சதாசிவ தேவரிடத்தும் இறைமையாலே அதிகாரமாகச் சகளீகரித்த மகேசுர தேவரிடத்தும் அருளாலே இலயமாக நிட்களமாகிய இலய சிவனிடத்தும் விரும்பி நின்றுன் பரமசிவன். இங்ஙனம் நின்று கெடாத சுத்தமாயை முதலாகிய சுத்தாத்துவாவை பரமசிவன் பிரேரித்துச் செய்தலால் அந்தச் சுத்தாத்துவாவுக்கு அதிபனுகிய பரமசிவன் எவ்வண்ணம் கருத்தாவோ? அவ்வண்ணமே அசுத்தாத்துவாவுக்கு அனந்த தேவர் கருத்தாவா யிருப்பர். மகத்தாகிய வலிமையினையுடைய இராசாவாலே அனுக்கிரக்கப்பட்டு இராசவரிசை தரப்பெற்றோன் இப்படிக் கொடுத்த இராசாவோடு ஒக்கக் கருத்திருத்துவம் செலுத்தினற் போல பரமசிவன் சத்தி எக்காலத்தும் குற்றமற அறிவிக்க இனிதாக அனைத்தையும் சந்தேகமற அறிந்து சுத்தாத்துவாவாலாகிய திருமேனியோடு நின்று ஆராய்தற்கரிய சருவ ஞானத்தையும் நலமாக உடையராய் மிகவும் விரிந்துயர்ந்து, கோடமற அசுத்தாத்துவாவிலுள்ளன யாவையும் செய்யா நிற்பர் எ - று.

மன், ஏ, ஒ, அசை.

நு· வி: புற்கலன் - வினைக்கட்டு உடையவன். நிட்களம் - அருவம்; சகளம் - உருவம்; உடலோடு கூடியது. கலை - உடல். பந்தன் - வினைக்கட்டுடையவன். விட்விகாரம் - விடத்தால் ஏற்பட்ட மாறுபட்ட தோற்றம். கருத்திருவம் - தலைமைத் தன்மை. அனந்த தேவர் - விஞ்ஞான கலர், பிரளயா கலரில் பசுத்துவம் நீங்கி முத்தராய் அதிகார மலபாசங்களை மாத்திரம் உடைமையான் முதல்வன் ஏவல்வழி நின்று நடத்துவோர் என்பர் சிவஞான முனிவர்.

ஆயுள் சந்தா செலுத்தினால்

ஓர் அன்பளிப்பு

ஸ்ரீ குமரகுருபரர் திங்களிதழுக்கு

ரூ. 125 ஆயுட் சந்தா செலுத்தினால்

ரூ. 55 மதிப்புள்ள

கந்தர் கலிவெண்பா

இசைத்தட்டு ஒன்று அன்பளிப்பாக
அளிக்கப்பெறும்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய
அரிய பாராயண நூலாகிய கந்தர் கலிவெண்பா
பிரபல இசையறிஞர் சேலம்
டாக்டர் ஜெயலட்சுமி அவர்களின்
இனிய குரலிசையுடன் L. P இசைத்தட்டாக
வெளியிடப்பெற்றுள்ளது.

ஆயுள் சந்தா ரூ. 125 அனுப்புவோருக்கு இந்த இசைத்
தட்டு ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.
அஞ்சல் செலவு ரூ. 9—00.

முன்னமேயே ஆயுட்சந்தா செலுத்தியவர்கள் ரூ 25-ம்
அனுப்புகைச் செலவும் பணவிடை மூலம் அனுப்பி
இசைத்தட்டைப் பெறலாம்.

'ஸ்ரீ குமரகுருபரர்'
பதிவு எண். T. N. / KMB / 12.

ஸ்ரீ குமரகுருபரர்

சமய இலக்கியத் திங்கள் இதழ்

சந்தா விபரம்

ஆயுள் சந்தா	(உள்நாடு)	ரூ 125-00
,,	(வெளிநாடு)	ரூ 225-00
ஆண்டுச்சந்தா	(உள்நாடு)	ரூ 10-00
,,	(ஸ்ரீலங்கா)	ரூ. 13-00
,,	(வெளிநாடு)	ரூ. 15-00

M O. அனுப்ப வேண்டிய முகவரி:
நிர்வாக ஆசிரியர். "ஸ்ரீகுமர குருபரர்"
ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள். 612 504.

வெளியிடுபவரும் ஆசிரியரும்: ம. வே. பசுபதி
அச்சிடுபவர் தா. ம. வெள்ளைவாரணம்.
ஸ்ரீகுமரகுருபரர் அச்சகம், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

Posted at sub-Post Office at Tirupanandal
612504

Licence No. 01. Licensed to Post without Prepayment.

திரு.

ஏ. 67
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
பெஸண்ட் நகர்,
சென்னை—600 090.